
ISSN: 2012 - 6352

# தொண்டன்

ஆரம்பம் 1969 பெப்ரவரி    சமய - சமூக - இலக்கிய வெளியீடு    ஆகஸ்ட் - 2012    30/=




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

**ஆகஸ்ட் - 2012**

மலர் - 44    இதழ் - 07

**ஆசிரியர்**
லெஸ்லி ஜெயகாந்தன்

**இணை ஆசிரியர்**
மலர்வேந்தன்

**துணை ஆசிரியர்கள்**
மெற்றில்டா இராஜேந்திரம்
பெஸ்லீயோ வாஸ்
சந்திரசேகரன் சசீதரன்
பைந்தமிழ்க்குமரன் டேவிட்

**ஆலோசகர்கள்**
A.G. இராஜேந்திரம்
A.S. யோகராஜா

**வெளியீடு**
சமூகத் தொடர்பு நிலையம்.
திரு / மட். மறை மாவட்டம்

**முகவரி**
சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் - 44
மட்டக்களப்பு.

**பதிப்பகம்**
வணசிங்கா அச்சகம்
மட்டக்களப்பு.

## உள்ளே ...



அன்புடன் உங்களோடு ......... 01
கிழக்கில் புதிய மறை ............ 02
மட்டக்களப்பின் மகிமை ......... 03
வடக்கில் உதித்த முத்து ....... 04
75 வயது இளைஞன் ............ 05
சிறையில் மறைக்கல்வி ........... 06
46வது உலகத் தொடர் ......... 10
அன்பின் அரசி அன்னை ......... 12
இன்றைய உலகில் .............. 13
தொண்டனின் சில ............... 15
மறைக்கல்வியும் ஊடகங்க ..... 17
மன்னார் மறைமாவட்ட .......... 20
தமிழில் கிறிஸ்தவ ................. 21
இலக்கிய மஞ்சரி ................ 23
கடுகுக் கதை .................... 24
மனித உயிர்களை மதி .......... 25
விவிலியங் கற்போம் .............. 27
அறிவை வளர்ப்போம் ............ 28

ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)

**SOCIAL COMMUNICATIONS CENTRE**
**P. O. BOX - 44**
**BATTICALOA.**
**TEL: 065 - 2226486**
**E.mail: scctribatti@gmail.com**

விலை : 30/=
ஆண்டு சந்தா : 500/=
(தபாற்செலவு உட்பட)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு....

இன்று மனித குலத்திற்கும் உலகத்திற்கும் மற்றும் ஏனைய பயன்பாட்டிற்கும் தொடர்பு சாதனங்கள் மிகவும் முக்கியமானதென்பதை நாம் மறந்துவிட முடியாது.

நகைச்சுவையாகச் சொல்வார்கள்:

"மாட்டின் கழுத்தில் தொங்குவது Bell மனிதனின் கழுத்தில் தொங்குவது Cell" என்று அந்த அளவிற்கு மனிதனுடைய தொடர்பாடல் வசதிகள் மூலை முடுக்குகள் எங்கும் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

முன்னாள் விஞ்ஞானியும் எழுத்தாளருமான ஆர்த்தர் C. கிளார்க் அவர்கள், தான் இறக்குமுன் சொல்லியிருந்தார்... 2000மாம் ஆண்டளவில் மனிதன் உலகத்தையே ஒரு கைக்குள் கொண்டு வருவானென்று... அவர் சொன்னது Cell போனைப் பற்றியே.

இன்று இருந்த இடத்திலிருந்தே ஒருவரோடொருவர் உலகின் எந்த மூலையிலிருந்தும் தொடர்பு சாதனங்கள் மூலம் தொடர்புகொள்ள முடியும்.

பாப்பரசர் 16ம் ஆசீர்வாதப்பர் திருச்சபையின் 46வது உலகத் தொடர்பாடல் தினத்திலே "வார்த்தையும் நிசப்தமும் மறைத்தூதின் பாதை" என்ற செய்தியை முன்வைத்தார். தொடர்பாடலுக்கு வார்த்தையும் நிசப்தமும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகக் காணப்படுகிறது.

இவை இரண்டும் வேறுபடும் இடத்தில் தொடர்பாடலில் சில சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஆண்டவர் இயேசுக் கிறிஸ்து மிகச் சிறந்த தொடர்பாளராகக் காணப்பட்டார். உவமைகள், புதுமைகள், குணமாக்கலின் வழியாக நற்செய்தியைப் பறைசாற்றினார்.

எதைப் பேச வேண்டுமோ அதைப் பேசினார்... எங்கு மௌனமாக இருக்க வேண்டுமோ அங்கே அமைதியைக் கடைப்பிடித்தார்.

எனவே, எமது வாழ்க்கையிலும் வார்த்தைக்கும் நிசப்தத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

இன்று தொடர்புசாதனங்கள் ஒரு பக்கத்தில் நல்லவற்றைக் கொடுத்தாலும் பலர் அதைத் தீய வழிகளிலும் பயன்படுத்துகின்றனர். முக்கியமாக இளம் பராயத்தினர் தங்களது சுக போகத்திற்காக தவறான முறையில் இதைக் கையாளுகின்றார்கள், இவை நிறுத்தப்பட வேண்டும்.

உலகத் தொடர்பாடல் தினத்தைக் கொண்டாடுகின்ற இந்த நாட்களில் அதன் உண்மைத் தன்மையையும் முக்கியத்துவத்தையும் கருத்திற் கொண்டு அதைப் பயன்படுத்த வேண்டும். தொடர்பாடலைப் பற்றிக் கற்பதென்பது பேசுவதைப் போன்று செவிமடுக்கவும் ஆழ்ந்து சிந்திக்கவும் கற்பதாகும். **மறைபரப்புப் பணியில் ஈடுபட்டுள்ளவர்க்கு இது மிகவும் முக்கியமானதாகும்.**

ஆண்டவர் இயேசுவைப் போல நற்செய்தியின் தூதுவர்களாக மாற்றம் பெறுவோம். அன்னை மரியின் 'நிசப்தம்' வார்த்தைக்குச் செவிமடுத்தது அதனால், அவள் மனம் பூத்துக் குலுங்கியது. அதேபோல் நாமும் வார்த்தைக்கும் நிசப்தத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கும் போது குடும்பமும் பூத்துக் குலுங்கும்; பூக்களாக மாற்றம் பெறும்.

● - ஆசிரியர் -



## இறைவாக்கு

"தந்தையுடனும் அவர் மகன் இயேசுக் கிறிஸ்துவுடனும் நாங்கள் கொண்டுள்ள நட்புறவை நீங்களும் கொண்டிருக்குமாறு நாங்கள் காண்பதை, நாங்கள் கேட்பதை உங்களுக்கு அறிவிக்கின்றோம்."

● (1 யோவான் 1:3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையின் வரலாற்றில் குறிப்பாக கிழக்கு மாகாண கத்தோலிக்க திருச்சபையின் வரலாற்றில் மிக முக்கியமான நிகழ்வொன்றை கடந்த ஜூலை மாதம் 3ம் திகதி வத்திக்கானில் உள்ள கத்தோலிக்க உயர்பீடம் அறிவித்தது.

இதுவரை திருகோணமலை ~ மட்டக்களப்பு மறைமாவட்டமாக இருந்த கிழக்குத் திருச்சபை தற்போது இரு மறைமாவட்டங்களாக மாறியுள்ளது.

கிழக்கில் புதிதாக உருவாகியுள்ள மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் முதல் ஆயராக பேரருள் தந்தை யோசப் பொன்னையா ஆண்டகை திருத்தந்தை 16ம் பெனடிக் அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கடந்த நான்கு ஆண்டுகளாக துணையாயராகப் பணிபுரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

திருகோணமலை மறைமாவட்ட ஆயராக பேரருள் தந்தை யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் தொடர்ந்து பணியாற்றுவார்.

நூற்றிப் பத்தொன்பது ஆண்டுகால வரலாற்றைக் கொண்ட திருகோணமலை ~ மட்டக்களப்பு மறை மாவட்டம் காலத்தின் தேவைக்கும், கிழக்குப் பிரதேச மக்களின் நீண்டகால எதிர்பார்ப்புக்கும் ஏற்ப இரண்டாகப் பிரிக்கப்பட்டு புதிய மறைமாவட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. புதிய மறைமாவட்டம் மட்டக்களப்பு அம்பாறை ஆகிய இரண்டு மாவட்டங்களை உள்ளடக்கியது. பதினொரு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகையைக் கொண்ட இம்மாவட்டங்களில் ஏறக்குறைய ஐம்பத்தையாயிரத்து இருநூற்றைம்பது கத்தோலிக்கர்கள் உள்ளனர். இருபத்து நான்கு பங்குத் தளங்களைக் கொண்ட புதிய மறைமாவட்டத்தில் முப்பத்தைந்து மறைமாவட்டக் குருக்களும் தொன்னூற்றி ஏழு துறவிகளும் பணிபுரிகின்றனர்.

நிர்வாக வசதிக்காகவும், கிறிஸ்தவ விசுவாசத்தை மேலும் வீச்சோடு கட்டி எழுப்பி மேம்பாடுகாணவும் மாவட்டங்களைப் பிரிப்பது, நிலப்பிரிவுகளை ஏற்படுத்துவது, அதிகாரங்களைப் பகிர்வது பிரிவினை அல்ல, அது திருச்சபையின் ஒற்றுமையையும் விசுவாசத்தையும் உறுதிப்படுத்தும்... மேய்ப்புப் பணியை மேம்படுத்தும் என்று திருச்சபை அனைவருக்கும் தெளிவுபடுத்தியுள்ளது.



இதுவரை இலங்கையில் பதினொன்றாக இருந்த மறைமாவட்டங் களின் எண்ணிக்கை பன்னிரெண்டாக உயர்ந்துள்ள அதேவேளை, மூன்றாக இருந்த தமிழ் மறைமாவட்டங்களின் எண்ணிக்கை நான்காக உயர்ந் துள்ளது.

புதிய மறைமாவட்டத்தை உத்தியோக பூர்வமாகப் பொறுப்பேற்கும் நிகழ்வு எதிர்வரும் செப்டம்பர் மாதம் 23ம் நாள் ஞாயிற்றுக்கிழமை திருச்சபையின் பிரதிநிதி பேரருள் தந்தை கர்தினால் யோசப் ஸ்பிட்டரி தலைமையில் மட்டக்களப்பில் பேராலயமாக உயர்த்தப்பட்டுள்ள புனித மரியாள் பேராலயத்தில் நடைபெறுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய மறைமாவட்டத்தின் முதல் ஆயருக்கு தொண்டன் தனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதோடு ஆயரின் அறிவாற்றலாலும் உறுதியான செயற்றிறன் மிக்க நடவடிக்கைகளாலும் புதிய மறைமாவட்டம் பொலிவு பெறவும், புதிய ஆயர் எல்லாவித நலன்களும் பெற்றுச் சிறப்புறவும் வேண்டி நிற்கின்றது.

- இன்பம் -


# கிழக்கில் புதிய மறைமாவட்டம்

## முதல் ஆயர் பேரருள் தந்தை யோசப் பொன்னையா ஆண்டகை !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பின் மகிமை



மண்ணின் மைந்தன்
மட்டக்களப்பு
மறைமாவட்டத்தின்
முதல் ஆயராக
முடி சூடும்
பொன்னின் செல்வன்
பூரிக்கிறது தேசம்!

தன்னைமுனை என்னும்
தமிழ் மண் பக்கம்
எட்டுத் திசையும்
எட்டிப்பார்க்கிறது
சின்னஞ் சிறு ஊர்
எப்படிச் சிகரமானது?

மட்டக்களப்பு
மகிழ்ச்சிக் கடலில் மூழ்கும்
புகழ்ச்சி மொழிகள்
பொங்கிப் பெருகும்.

பொன்னையா யோசப்
ஆண்டகை
இந்த மண்ணுக்குக் கிடைத்த
விண்ணின் கொடை
விளக்கம் எதற்கு?

ஊரெல்லாம்
உற்சாகத் தென்றல்
பேர் சொல்லி வீசும்
பிறகென்ன வேண்டும்?

ஆளுமை மிக்க
ஓர் ஆயர்
சூழும் இருளை விரட்டும்
சுடர் ஒளி

ஒரு கையில் செங்கோல்
மறு கையில் எழுதுகோல்
பெருமை இது
ஆயர் பெற்ற பேறு!

பைபிள் ஒரு பக்கம்
பைந்தமிழ் ஏடுகள் மறுபக்கம்
பொய்யில்லை
ஆயர் ஒரு வீரமாமுனிவர்!

தமிழும் ஆங்கிலமும்
ஆயரைத் தழுவி மகிழும்
அமிர்தம்....... அமிழ்தம்
ஆக்க மெல்லாம்!

சீர்திருத்தவாதி
சிந்தனையாளன்
ஊரெல்லாம் சேர்ந்து
உண்மை இது கூறும்!

சாதாரண குடும்பத்தில்
பிறந்த ஒருவர்
கத்தோலிக்க சாம்ராச்சியத்தைக்
கட்டியாளும்
ஆயரில் ஒருவரானமை
ஒரு பெரும் சரித்திரம்.

சரித்திரம் படைத்த
சாதனையாளன்
கருத்துடன் பணிபுரியும்
கடவுளின் தூது

மட்டக்களப்பின்
மகிமை
எட்டுத் திசையும்
எழுந்து நின்று வாழ்த்தும்.

ஆயிரத்தில் ஒருவர்
எங்கள் ஆயர்
அதற்கான
பாயிரம் இது
பாராட்டுப் பத்திரம்!

வாழ்க ஆயர்
வானவனின் அருளோடு
ஆள்க எங்கள்
அன்பின் இராச்சியத்தை!

**வாகரைவாணன்**

## செபத்தின் முக்கியத்துவம்



அருட்பணியாளர்கள், மற்றும் இருபால் துறவிகள் அன்றாட வாழ்வில் செபத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார் திருத்தந்தை 16ம் பெனடிக்.

7வது குடும்ப மாநாட்டைச் சிறப்பிக்க மிலான் நகரத்துக்குச் சென்ற திருத்தந்தை, அருட்பணியாளர்கள், மற்றும் துறவிகளைச் சந்தித்து உரையாற்றிய போது இவ்வாறு கூறினார். கிறிஸ்துவின் மீது அன்பு கொண்டு வாழ்வது அனைத்துக் கிறிஸ்தவர்களுக்கும் முக்கியம் என்றாலும் கன்னிமை வாழ்வை ஏற்றுள்ள குருக்களுக்கும் துறவிகளுக்கும் இது தனிப்பட்ட விதத்தில் இன்றியமையாதது என்று கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த 29 ஆண்டுகளாக திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் ஆயராகப் பெரும்பணியாற்றிவரும் பேரருட்தந்தை யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள், மட்டக்களப்பு தனி மறைமாவட்டமாக உருவாகியிருப்பதால் வருங்காலங்களில் திருகோணமலை மறைமாவட்ட ஆயராகத் தமது பணியைத் தொடர்வார்.

ஒ ட க் கி க் உ தி த் த சூ த் து

1983ம் ஆண்டு இலங்கைத் தமிழர் வரலாற்றைத் திசைதிருப்பிய கொடிய ஆண்டு... இனக்கலவரத்தால் பெரும் அழிவுகளையும், இழப்புகளையும் சந்தித்த ஆண்டு... தொடர்ந்து ஏற்பட்ட பெரும் அழிவுகளுக்குக் கட்டியம் கூறிய ஆண்டு... இத்தகைய துயரம் நிறைந்த ஆண்டில் கிழக்குப் பிரதேச மக்களுக்கு ஆறுதல் அளிக்கவும், அவர்களைப் பாதுகாக்கவும், பணி புரிந்திடவும் இறைவன் அனுப்பிவைத்த தூதர் அவர்.

1983ம் ஆண்டு மே மாதம் 7ம் திகதி ஆயராகத் திருநிலைப்படுத் தப்பட்டு இன்றுவரை கிழக்குப் பிரதேசத்தில் பணிபுரிந்து வரும் ஆயர் அவர்கள் தமது மேய்ப்புப் பணியை நிறைவாகச் செய்து புகழ் பெற்றவர். தமது மக்களது விசுவாச வாழ்வின் மேம்பாட்டுக்காகவும் சமூக, பொருளாதார வளர்ச்சிக்காகவும் இனங்களுக்கிடையே அமைதியும் ஒற்றுமையும் நிலவவும் ஆயர் அவர்கள் ஆற்றியுள்ள பெரும் பணிகள் அனைவராலும் நன்றியுடன் நினைவு கூரப்படுகின்றன. அத்துடன், கிழக்கு மறைமாவட்டம் தமது மண்ணின் மைந்தர்களால் பரிபாலிக் கப்படவேண்டும் என்று தூரநோக்கோடு திட்டமிட்டு, தகுதியான வர்களை அவர் வளர்த்தெடுத்ததன் விளைவுகள்தான் இன்று அறுவடை செய்யப்படுகின்றன.

சமயங்கள் வேலிகளாகி, மதில்களாகி, ஆன்மீகம் தொலைந்துபோன காலமிது. சமயங்களுக்காகவும் சபை களுக்காகவும் உறவுகளை அறுக்கின்ற, வெறுக்கின்ற, செய்நன்றி மறக்கின்ற, மூர்க்கத்தனமாக வெறுக்கின்ற மூடத்தனமான பக்தர்கள் பெருகிப் போயுள்ளனர். இவர்கள் எல்லா மதங்களிலுமுண்டு, எல்லாச் சபைகளிலும் உண்டு. இத்தகைய ஒரு சூழலில் உலகின் நான்கு பெரும் மதங்க ளும் நிலவும் கிழக்கு மாகாணத்தில் அனைத்து மக்களுக்கு மான சமூக அபிவிருத்திப் பணிகளூடாகவும் சர்வசமய சமாதானப் பேரவை போன்ற அமைப்புகளூடாகவும் சமயங் கடந்த அன்புறவை, ஆன்மீகத்தை வளர்ப்பதில் நமது ஆயர் தொடர்ந்து ஈடுபட்டவர். அதனால்தான் அனைத்து இன மத மக்களினதும் நம்பிக்கைக் குப் பாத்திரமாக விளங்குகிறார். எத்தகைய அசம் பாவிதங்கள் நடந்தாலும் ஆயரது தலைமையில் அனைவரும் ஒன்றுகூடித் தீர்வுகாணவும், அமைதி ஏற்படுத்தவும் முன்வருகின்றனர் எனில் அது அவரது ஆன்மீக வாழ்வின் சிறப்பன்றி வேறு எதுவாக இருக்கமுடியும்?

வட பகுதியிலுள்ள ஊர்காவற்று றையில் பிறந்து, குருவாகி, பங்குப் பணி கள் மற்றும் பொறுப்பான பல பதவிகள் ...



தொடர் 14ம் பக் ...

## கிழக்கில் ஒளிர்ந்தது

மலர்வேந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 75 ஆயர் கிங்ஸ்லி

**வாகரைவாணன்**

எழுபத்தைந்து வயது
இளைஞன்
எப்போதும் சுறுசுறுப்பு
பழுதில்லாப் பணி
எதிலும்
பலன் எதிர்பாராப்
பண்பாடு.

ஆனி ஏழு
1983ல்
இந்த மண்ணின்
ஆயராகி
வானிலவாக
வலம் வந்தவர்.

திருமலை - மட்டக்களப்பு
மறைமாநிலத்திற்குப்
பெருமை தேடித் தந்த
பேராளன்

முப்பதாண்டுகள்
ஆயர் சிம்மாசனத்தில்
அமர்ந்திருந்து
முத்திரை பதித்தவர்.

வடக்கில் இருந்து வந்து
கிழக்கில் வீசும் வசந்தம்

கிழக்குப் புனைந்த
புகழ்க் கிரீடம்.

கிழக்கிற்குக்
கிடைத்த பொக்கிஷம்
விளக்காக என்றும்
வெளிச்சம் தருபவர்

ஊர்காவற்றுறை
அந்தோனியார் பாடசாலை
ஊட்டிய கல்வி தான்
ஆயரை
உரோமாபுரி வரை
உயரச் செய்தது.

ஒல்லி உடல்
அதற்கு
உழைப்புத்தான்
ஊட்டச்சத்து

எளிமைக்கு ஓர்
எடுத்துக் காட்டு
துளியளவும் ஆடம்பரம்
தொட்டதில்லை.

பிறந்த மாதத்திலேயே
குருவாக
நிறைந்த வரம் பெற்றவர்
இதுவே
நிரந்தரச் சிறப்பு.

சமாதானந்தான்
சகலருக்கும்
ஆயர் சொல்லும்
சத்திய வார்த்தை.

சமயம்
சமூகத்தில் ஓர் அங்கம்
இதனைச்
சரியாகப் புரிந்து கொண்ட
ஒரு சந்நியாசி.

பவள விழாக் கண்ட
அவர் பயணம்
துவளாது இன்றும்
தொடர்கின்றது.

நாளைய வரலாற்றில்
நம் ஆயர் நாமம்
தங்கமெனத்
தகதகக்கும்.

மட்டக்களப்புத் தமிழகம்
பெற்ற இந்த மகத்துவம்
இன்று
திருமலையின் திருவாகின்றது.

அந்த மண்ணும்
ஆயரின்
சொந்த மண்தான்
தந்தையவர் பணி
அங்கும்
தடையின்றித் தொடரும்!

ஆயர்
இன்னும் பல்லாண்டு வாழ
நேய வாழ்த்து
நெஞ்சார உரைத்தோம்.

பிரியும் விடையல்ல இது
பிரியாவிடை
உரிமையோடு இதனை
உலகறியச் சொன்னோம்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(உலகத் தொடர்பு தினத்தையிட்டு நடைபெற்ற போட்டியில் முதல் பரிசு பெற்ற சிறுகதை)

# சிறையில் மறைக்கல்வி

வெலிகட பெண்கள் சிறைச்சாலை பரபரப்பாகக் காணப்பட்டது.

"என்ன குசும், காலையிலே தடபுடலா ஆயத்தங்கள் நடக்குது, யாரு வறாங்களாம்?" வினவினாள் தேதுனு.

"யாரோ செல்வி. பிரியதர்ஷினி இவன்சலினாம். சிறைச்சாலைக் கைதிகளுக்காகவும், மன நோயாளிகளுக்காகவும் ஏதோ ஒரு சேவை செய்யிறாவாம். அதோட பல பொது நல சேவைகளும் செய்யிறாவாம்". குசும் கூறிக்கொண்டிருக்கும் பொழுதே "உனக்கெப்படி இதெல்லாம் தெரியும்?" என வினவிக் கொண்டு இணைகிறாள் சுகுணாவதி.

"நேற்றிரவும் நம்மட வாடான்மார் ரெண்டு பேரும் கதைச்சிக் கொண்டு இருந்தது காதில விழுந்தது. அவய்க்கு இப்பத்தான் 28 வயதாம். இந்தச் சின்ன வயசிலையே தேசிய விருது பெற்றிருக்காவாம். நோபல் பரிசும் கிடைக்கலாமெண்டு எதிர்பார்க்கப்படுதாம்". குசும் ஆச்சரியத்துடன் கூறினாள்.

"அதென்ன சாமானடி நோபல் பரிசு" சுகுணாவதி மேலும் கேள்வி தொடுத்தாள்.

"ஏய், அங்க என்ன மீட்டிங் நடக்குது? கெதியா இங்க வந்து வேலய முடிங்க" ஜெயில் வாடன் உரத்துக் கத்தியபடி கையில் தடியுடன் வந்து கொண்டிருந்தார்.

"ம்...... இந்தா வாறாள்டீ பூலாந்தேவி. இவளுக்கொருநாள் இருட்டடி கொடுக்கணும்' கூறிக்கொண்டே மூவரும் அங்கிருந்து சென்றனர்.

சிறைச்சாலை வெளியரங்கின் மேடையில் ஐந்து ஆசனங்கள் இடப்பட்டன. ஒலிபெருக்கியைப் பரிசீலனை செய்தார் ஒருவர். "செக்....., செக்....., வன், டூ, த்ரீ" எனும் வார்த்தைகள் மீண்டும் மீண்டும் வெளிவந்து கொண்டிருந்தன.

அருட்சகோதரி மேரி ஜெனா சூசைப்பிள்ளை (OSB)

*மெல்விவ்லி,*
*இல.56, புனித பீற்றஸ் வீதி,*
*மொறட்டுவ.*

கைதிகளனைவரும் வெளியரங்கில் வெறுந்தரையில் அமர்ந்து கொண்டனர். அதிகாரிகள் பூமாலையுடனும், பூச் செண்டுகளுடனும் சிறைச்சாலை முன்வாயிலில் காத்துக் கொண்டிருந்தனர். அதிகாரியொருவர் நேரத்தைச் சரிபார்த்தார். கடிகாரத்தின் சிறியமுள் 10ஐ எட்டிப்பிடிக்க பெரியமுள் 12ஐத் தாண்டி ஐந்து வினாடிகளால் முன்னேறிக் கொண்டிருந்தது. அப்பொழுது பொலிஸ் பாதுகாப்புடன் சில வாகனங்கள் சிறைச்சாலையின் முன் வந்து நின்றன. அதில் ஒரு காரிலிருந்து வெள்ளைச் சேலை உடுத்தியபடி இறங்கினார் பிரியதர்ஷினி. முழுமதி நிலவின் பிரகாசம் கொண்ட புன்னகையுடன் பூமாலையையும், பூச்செண்டுகளையும் பெற்றுக் கொண்டு உள்நுழைந்தார். கைதிகளின் கைதட்டல் வரவேற்புடன் அனைவரும் மேடைக்குச் சென்று அமர்ந்து கொண்டனர். ஏனையோர் மேடைக்கருகில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## குறும்(புப்)பா – 91

**புதுக்காய்ச்சல் புகுந்திருக்கு ஊரில்**
**புதுமருந்து அதுவாக்குச் சீட்டில்**
**வேலைவிலை குறைப்புச்சில இலவசங்கள் வேறென்ன**
**இதுதேர்தல் ஜனநாய கம்**

~ மலர் ~

இடப்பட்டிருந்த ஆசனங்களில் அமர்ந்து கொண்டனர்.

மங்கல விளக்கேற்றல், வரவேற்புரை, உயர் அதிகாரியின் சொற்பொழிவு என்பவற்றைத் தொடர்ந்து

"தற்பொழுது மதிப்பிற்குரிய எமது தேசத்தின் உயர் பெண்மணி செல்வி. பிரியதர்ஷினி இவன்சலின் அன்ரனி அவர்களை உரையாற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்" என அழைப்பு விடுத்தார் அறிவிப்பாளர். 30 நிமிடங்களுக்கும் மேலாகப் பேசிய அவரது பேச்சை அனைவரும் மெய்மறந்து செவிமடுத்துக் கொண்டிருந்தனர். வாழ்க்கையே முடிந்துவிட்டது என்றிருந்த பல கைதிகளுக்கு அவரின் ஒவ்வொரு வார்த்தைகளும் வாழ்வில் ஒரு பிடிப்பையும், வாழ வேண்டும் என்ற உந்துதலையும், எதிர்காலத்தின் மேல் நம்பிக்கையையும் கொடுத்தன. அவர்களின் கரகோசங்கள் விண்ணைக் கிழிக்குமளவிற்கு மேலெழுந்தன. சிலரின் கண்களில் கண்ணீர் பெருகியது. உரையைத் தொடர்ந்து பிரியதர்ஷினி அவர்கள் பொன்னாடை போர்த்தியும், நினைவுச் சின்னமொன்று வழங்கியும் கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வுகளைத் தொடர்ந்து கைதிகளுடன் பேசுவதற்கு அனுமதி கேட்டார் பிரியதர்ஷினி. கைதிகள் அவரருகில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். கைதிகளின் கரங்களைப் பற்றிப் பிடித்தபடி உரையாடிய அவர் சிலரை அன்புடன் அரவணைத்துக் கொண்டார்.

"மிஸ், அங்கே சில கைதிகள் இருக்கிறாங்க". ஒரு பகுதியைச் சுற்றிக் காட்டியபடி அங்கே அவரை அழைத்துச் சென்றார்கள்.

"அந்த செக்சனில் ஆயுட்கைதிகளும், மனநிலை பாதிக்கப்பட்ட கைதிகளும் உள்ளனர். இவங்கள ஒரு நாளும் வெளியில விடுறதில்ல. சிலர் முரட்டுத்தனமானவங்க, அருகில் நெருங்கவே முடியாது" விளக்கமளித்தார் அதிகாரியொருவர்.

"ஓ அப்படியா! நான் அவங்கள பாக்க முடியுமா?" வினவினார் பிரியதர்ஷினி.

"நிச்சயமாக ஆனால், அவர்களருகிற் சென்று கதைக்க முடியாது" எனக் கூறிக்கொண்டே உள்ளே அழைத்துச் சென்றார்.

தனித்தனி அறைகளில் அடைக்கப்பட்டிருந்த அவர்களின் முகங்களில் வெறித்தன்மையும், கோபமும் நிறைந்திருந்தன. எட்டாவதறையை அடைந்த பிரியதர்ஷினி அக்கைதியின் கைகால்கள் சங்கிலிகளால் கட்டப்பட்டிருப்பதைக் கண்டார். ஒரு மூலையில் இருந்து கொண்டு கால்களுக்குள் தன் முகத்தைப் புதைத்தபடி உட்காந்திருந்தார். பெண் காவலாளி ஒருவர் தடியினால் இரும்புக் கதவைத் தட்டினார். சத்தங்கேட்டு தலையை நிமிர்த்திய அக்கைதி பிரியதர்ஷினியை உற்றுநோக்கினார். அவரது முகத்தில் ஒருவித மகிழ்ச்சி தோன்றியது.

"பிரியா" என்று உச்சரித்தபடி எழுந்து ஓடிவர முயன்றார் ஆனால், பூட்டப்பட்டிருந்த சங்கிலிகளால் இழுக்கப்பட்டு முகங்குப்புற தரையில் விழுந்தார். "யாரிவ?" அருகில் நின்றுகொண்டிருந்த காவலாளியிடம் பிரியதர்ஷினி வினவினார். "இவட பேர் டல்றின், மட்டக்களப்பைச் சேர்ந்தவ". காவலாளியின் பதிலில் அதிர்ச்சியுற்ற அவர் "டல்றினா?"

**●● டல்றினைப் பார்க்கும் போது பிரியதர்ஷினியின் மனம் எரிமலையாய் வெடித்தது, சிதறியது. கருநீளக் கூந்தல் கத்தரிக்கப்பட்டு மொட்டையாக... கருவிழிகளைச் சுற்றி கருவளையங்கள்... அடிவாங்கி, அடிவாங்கி சிவந்து மரத்துவிட்ட உடலும் அவளை ஒரு மூதாட்டிபோல் தோற்றமளிக்கச் செய்தது. ●●**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என ஆச்சரியத் தொனியில் கேட்டார். "ஆம் மிஸ், விபச்சார வழக்கில் பிடிபட்டு ஜெயில்ல இருந்த நேரம். அவட வீட்டாக்கள் அந்த அவமானத்த தாங்க ஏலாம குடும்பத்தோட தூக்குப் போட்டுச் செத்துட்டாங்க. அதனால விரக்தியும் கோபமுங் கொண்டு சிறைச்சாலையில் இருந்தவங்கள கத்தியால் குத்தி காயப்படுத்தினார். அதில் ஒரு காவலாளியும், இரு கைதிகளும் உயிரிழந்து விட்டனர். பலர் பலத்த காயங்களோட உயிர் தப்பினர். பின் தன்னைத்தானே குத்திக் கொல்ல முயன்ற நேரம் காவலாளிகள் அவரைப் பிடித்துக் கட்டுப்பாட்டுக்குள்ள கொண்டுவந்தவங்க. இப்ப மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில இருக்கிறா". என்றார்.

விழிகளிரண்டும் குளங்களாய் மாற "நான் அவவோட கதைக்க வேணும்". பிரியதர்ஷினி கூறினார். "இல்ல மிஸ் அவ இதுவரைக்கும் யாரோடையும் கதைச்சதில்ல. பக்கத்தில போறவங்கள தாறுமாறாப் போட்டு அடிப்பா". "இல்ல அவ என்னோட தோழி. நான் கட்டாயமா அவயோட கதைச்சே ஆகவேணும்". பிடிவாதமாகக் கூறினார் பிரியதர்ஷினி. வேறு வழியின்றி அதிகாரிகளும் அனுமதித்தனர். காவலர்கள் சுற்றி நிற்க டல்றினுக்கருகில் சென்ற அவர் டல்றின் உட்காருவதற்கு உதவினார். இருவரும் ஒருவரையொருவர் கட்டியணைத்து அழுதனர். அவர்களுடைய வகுப்பிலேயே மிகவும் அழகானவள். படிப்பிலும் கெட்டிக்காரிதான். தந்தை தனியார் விடுதியொன்றில் உரிமையாளர், தாய் இலங்கை வங்கி முகாமையாளர். பணத்திற்கும் வசதிவாய்ப்புகளுக்கும் குறைவே இல்லை. தரம் 7லையே கையடக்கத் தொலை பேசி பாவிக்கத் தொடங்கினாள். வீட்டில் இணையத்தளத்துடன் கணினி வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன. இதனால் படிப்பில் கவனம் குறைந்தது. ஒருவாறாக O/L சித்தியடைந்து A/L படித்துக் கொண்டிருக்கும் பொழுது, அடிக்கடி பாடசாலைக்கு சமூகமளிக்காது விடுமுறை எடுப்பாள். சில மாதங்களின் பின் முற்றாகப் பாடசாலைக்குச் சமூகமளிக்கவில்லை. டல்றின் கொழும்பிற்குச் சென்றுவிட்டதாக தகவல் கிடைத்தது. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த பிரியதர்ஷினி பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகிச் சென்றுவிட்டாள். கிட்டத்தட்ட பத்து வருடங்களின் பின் இன்றுதான் அவள் டல்றினைச் சந்திக்கிறாள். டல்றினைப் பார்க்கும்போது பிரியதர்ஷினியின் மனம் எரிமலையாய் வெடித்தது, சிதறியது. கருநீளக் கூந்தல் கத்தரிக்கப்பட்டு மொட்டையாக.... கருவிழிகளைச் சுற்றி கருவளையங்கள்; அடிவாங்கி, அடிவாங்கி சிவந்து மரத்துவிட்ட உடலும் அவளை ஒரு மூதாட்டிபோல் தோற்றமளிக்கச் செய்தது. "அந்த அழகும், எழிலும் இன்று எங்கே?" "நல்லதோர் வீணை செய்தே அதை நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?" எனும் பாரதியின் பாடல்கள் நினைவுக்கு வந்தன. "புழுதியில் எறியப்பட்ட வீணையல்ல இவள் தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக் கொண்ட யானை?" எனக் கூறியது உள்மனது.

இருவரும் மௌனமாகத் தரையில் உட்கார்ந்திருந்தனர். "டல்றின்.......... உன்ன நான் இந்த நிலையில பாப்பனெண்டு நினைக்கவேயில்ல". பிரியதர்ஷினி மௌனத்தைக் குலைத்தாள். அவள் தோளில் சாய்ந்திருந்த தலையை நிமிர்த்தி "ம்....." என்ற நமட்டுச் சிரிப்புடன் தலையை தொங்க விட்டாள் டல்றின். பிரியதர்ஷினி தன் கரங்களால் அவள் முகத்தை நிமிர்த்தி "ஏன் உனக்கு இந்த நிலம?....." பதிலேதும் இல்லை. "என்ன நடந்தது?......", தொடர்ந்தும் மௌனம். "கத டல்றின்......., மனம்விட்டுக் கத.......,

## செய்தி

### செப நோன்பு நாளாக பேராயர் ரொமேரோ இறந்த நாள்

*பேராயர் ஒஸ்கர் ரொமேரோ அவர்கள் இறந்த நாளான மார்ச் 24ம் திகதி சனிக்கிழமை, செபம், மற்றும், நோன்பு நாளாகக் கடைப்பிடிக்கப்படும் என்று இத்தாலிய பாப்பிறை மறைபணிக்கழகத்தின் இளையோர் அணி அறிவித்துள்ளது.*

*1980ம் ஆண்டு மார்ச் மாதம் 24ம் திகதி கொலையுண்ட பேராயர் ரொமேரோவின் நினைவாக 1993ம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த இளையோர் அணி ஒவ்வோர் ஆண்டும் 24ம் திகதியன்று நற்செய்திப் பணிக்கென தங்கள் உயிரை இழந்தோரை நினைவு கூர்ந்து அந்நாளை ஒரு செப நோன்பு நாளாய்க் கடைபிடித்து வருகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்ன இவங்க பைத்தியமெண்டுறாங்க.........
சொல்லு டல்றின், என்னதான் நடந்தது?"
"நான் பைத்தியம் இல்ல......, நான் பைத்தியம் இல்ல" மெதுவாகப் பேச ஆரம்பித்தாள் டல்றின்.
"நான் ஒரு ஏமாளி.
"எல்லாரும் என்ன ஏமாத்திப் போட்டாங்க..... எல்லாரும்......"
பலமாகச் சிரிக்கின்றாள்; மீண்டும் அழுகின்றாள். அவளது தலையை வருடியபடி தேற்றுகின்றாள் பிரியதர்ஷினி. டல்றின் மீண்டும் பேச ஆரம்பித்தாள்;
"எல்லாம் அந்தக் கொம்பியூட்டர், அந்த பேஸ் புக், காதல் கத்தரிக்கா செய்த வேல; அவன நம்பி ஏமாந்திட்டன்". பிரியதர்ஷினி அவளது இருகரங்களையும் பற்றிக்கொள்ள தொடர்ந்தாள் டல்றின், "பேஸ் புக் மூலமாகத்தான் அவனத் தெரியும். காதலிச்சி யாருக்கும் தெரியாம, அவன நம்பி கொழும்புக்குப் போனன். போன பிறகுதான் தெரிஞ்சது, சண்டாளன் பொம்புளைகள வைச்சி தொழில் பண்ணுறவனெண்டு. விட்டில் பூச்சி மாதிரி ஆயிட்டன். ஆபாசப்படம்.... விபச்சாரம்.....'
பிரியதர்ஷினியின் மார்பில் முகத்தைப் புதைத்து அழுதாள். அதற்குமேல் அவளால் எதுவும் பேச முடியவில்லை. பிரியதர்ஷினியும் எதுவும் கேட்கவில்லை. டல்றினை இறுக அணைத்துக் கொண்டவள்,
"அழு, நல்லா அழு டல்றின். உண்ட மன வேதன குறையமட்டும் அழு. உண்ட இந்த நிலைமைக்கு நீ மட்டும் காரணமில்ல. எல்லாருந்தான் காரணம். அவற்றுக்கு அடிமையானது தான் உன்னோட பிழ. உனக்கு புது வாழ்க்க தொடங்கும். தொடங்க வைப்பன். கவலப்படாத". என தைரியமூட்டினாள்.
பொலிஸ்மா அதிகாரியிடம் டல்றினை தினமும் சந்திப்பதற்கான அனுமதியைப் பெற்றுக் கொண்டாள் பிரியதர்ஷினி. தனிப்பட்ட முறையில் டல்றினை சந்தித்துப் பேசினாள். சில உள எழுச்சிப் பயிற்சிகளையும், யோகப் பயிற்சிகளையும் கற்றுக் கொடுத்தாள். நாளடைவில் இறைவனைப்பற்றியும், இறையாசியைப்பற்றியும் பேசலானாள். செபிப்பதற்கும், திருவிவிலியம் வாசிப்பதற்கும் ஊக்கப்படுத்தினாள். ஒருமாத காலத்திற்குள் டல்றினிடம் பெரிய மாற்றம் ஏற்பட்டது. இப்பொழுது, அவளது கைகால்கள் சங்கிலிகளால் பூட்டப்படவில்லை. ஏனைய கைதிகளுடன் சிறிது சிறிதாக உரையாட ஆரம்பித்தாள். எல்லோருக்கும் டல்றினின் மாற்றம் ஆச்சரியத்தைக் கொடுத்தது. ஒருநாள் மாலைவேளை மரத்தடியொன்றில் அமர்ந்திருந்த பிரியதர்ஷினியும் டல்றினும்,
"பிரியா எனக்கு ஸ்கூல் ஞாபகம் வருது. நீ சன்டே பூசையையும், மறைக்கல்வி வகுப்பையும் ஒருநாளும் மிஸ் பண்ணினதே இல்ல. ஆனா நான் ஒரு காலத்திலயும் பூசைக்கே போனதில்ல. உன்ன நான் இதுக்காக கேலியும் செய்திருக்கன். அதுக்கான தண்டனையோ என்னமோ எனக்கு இந்த வாழ்க்க"
தன் உள்ளக் கிடக்கையை கொட்டினாள் டல்றின். அதற்குப் பிரியதர்ஷினி,
"பூசைக்குப் போறது நமக்குக் கிடைக்கிற ஆசீர்வாதம். மறைக்கல்விப் படிப்பு நமக்கு கிடைக்கிற தைரியம், தன்னம்பிக்க. இது பலருக்குத் தெரியாது. சமயப்பாடமும், பைபிள் படிப்பும் தான் மறைக்கல்வியெண்டு எல்லாரும் நினைக்கிறாங்க. இலவசமெண்டதால அதுக்கு மதிப்பில்ல. ஆனா, பரிசுத்த ஆவிட ஆசி, அன்னை மரியின் வேண்டல், சம்மனசுகளின் பாதுகாப்பு, வழிநடத்தல் இதன் மூலமா கிடைக்கிறதென்றது மறைந்துள்ள உண்மை. உதாரணமாக, பலதைக் கூறலாம். நான் இங்க உனக்கு செய்ததும் ஒருவகையான மறைக்கல்விதான். அதுக்கு இடம், காலம், வயதெல்லை எல்லாம் இல்லை. மறைக்கல்வி நாட்டுக்கு நல்ல குடிமக்களை உருவாக்குது".
பேசிக்கொண்டிருக்கும் பொழுதே அவர்களை நெருங்கிய அதிகாரியொருவர்
"மேடம், நீங்க பலநாளா ஓடித்திரிஞ்சதுக்கு இண்டைக்கு பலன் கிடைச்சித்து. கைதி டல்றினை பரிசீலனை செய்த வைத்தியர்களும், அதிகாரிகளும் நல்ல ரிப்போட் குடுத்திருக்காங்க. அவட ஆயுட்தண்டனைய குறைச்சு ஏழு வருட சிறைத்தண்டன குடுத்திருக்காங்க"
என்ற செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவித்தார். பிரியதர்ஷினியின், சிறையில் மறைக்கல்வி, ஏனைய கைதிகளிடமும் தொடர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



46வது
உலகத் தொடர்பாடல்
தினத்திற்கான
திருத்தந்தை
16ம் பெனடிக்ற்
அவர்களின் செய்தி

# வார்த்தையும், நிசப்தமும்: மறைத்தூதின் பாதை

**அன்பின் சகோதர சகோதரிகளே,**

இரண்டாயிரத்துப் பன்னிரண்டாம் ஆண்டின் உலகத் தொடர்பாடல் தினத்தை முன்னிட்டு மானிட தொடர்பாடல் செயற்பாங்கின் தோற்றப்பாடு தொடர்பான சில ஆழமான சிந்தனைகளை உங்களுடன் பகிர்ந்துகொள்ள ஆசிக்கின்றேன். தொடர்பாடலானது முக்கியத்துவம் வாய்ந்திருந்த போதிலும் அடிக்கடி கவனத்திற்கொள்ளத் தவறப்படும் ஒன்றாகவும், தற்போது மீண்டும் நினைவிற் கொண்டுவரவேண்டிய அவசியம் உள்ள ஒன்றாகவும் காணப்படுகிறது.

தொடர்பாடலானது வார்த்தைக்கும், நிசப்தத்திற்குமிடையிலான தொடர்பினைக் கருதி நிற்கின்றது. தொடர்பாடலின் இரு முக்கிய அம்சங்களான வார்த்தையும், நிசப்தமும் சமநிலையில் கொள்ளப்பட வேண்டியவை. மக்களிடையே ஆழ்ந்த பிணைப்பும் நம்பகமான உரையாடலும் எட்டப்பட வேண்டின் இவை ஒன்றுடன் ஒன்று பிணைக்கப்பட வேண்டும். ஒன்று மாற்றி ஒன்றாகத் தொடர வேண்டும். வார்த்தையும், நிசப்தமும் பரஸ்பரம் ஒன்றையொன்று ஒதுக்கித் தள்ளும் பண்புடையனவாக மாறும்போது தொடர்பாடல் அறுந்துபோகின்றது அல்லது செயலிழந்து போகின்றது. இது ஒன்றில் குழப்பத்திற்கு இடமளிக்கின்றது அல்லது உயிரோட்டமற்ற ஓர் உணர்வு நிலையைத் தோற்றுவிக்கிறது. இரண்டும் ஒன்றையொன்று நிறைவு செய்யும்போது தொடர்பாடலானது பெறுமதியினையும், அர்த்தத்தையும் பெற்றுக்கொள்கிறது.

தொடர்பாடலின் மிக அத்தியாவசியமான ஒரு மூலகம் நிசப்தமாகும். நிசப்தமின்றேல் பெறுமதிமிக்க வார்த்தைகள் நிலைபெற முடியாத வையாகிவிடும். நிசப்தத்தில் எம்மை நாமே நன்கு அறிந்துகொள்ளவும், எமக்கு நாமே காதுகொடுத்துக் கேட்கவும் முடியும். நிசப்தத்தில் நல்ல சிந்தனைகள் பிறக்கின்றன. அவை ஆழம் பெறுகின்றன. நாம் என்ன பேச வேண்டும் என்பதையும், ஏனையவர்களிடமிருந்து நாம் என்ன எதிர்பார்க்கின்றோம் என்பதையும் ஐயமற அறிந்து கொள்கின்றோம். எம்மை நாமே எவ்வாறு வெளிப்படுத்த வேண்டும் என்பதை நாம் தேர்ந்தெடுக்கின்றோம். நாம் அமைதி கொள்ளும்போது ஏனையவர்கள் பேசுவதற்கும், அவர்கள் தம்மை வெளிப்படுத்துவதற்கும் இடமளிக்கின்றோம். போதியளவு பரீட்சிக்கப்படாத எமது சொந்த வார்த்தைகளிலேயும், எண்ணங்களிலேயும் நாம் கட்டுண்டிருப்பதையும் தவிர்க்கின்றோம். இவ்வாறு பரஸ்பர உற்றுநோக்கலுக்கு இடமேற்படுகின்றது. உதாரணமாக, அன்பு வயப்பட்ட மாந்தரிடையே சாடைகாட்டுதல், முகபாவனை, அங்க அசைவுகள் போன்ற அடையாளங்கள் மூலம் ஒருவருக்கொருவர் தம்மை வெளிக்காட்டுவதையும், மிகவும் நம்பத்தகுந்த தொடர்பாடல் இடம்பெறுவதையும் அடிக்கடி நாம் நிசப்தத்தில் அவதானிக்க முடிகின்றது. மகிழ்ச்சி, கவலை, துயரம் போன்றவையும் நிசப்தத்தில் பரப்பப்படக்கூடியவை; பரிமாறப்படக் கூடியவை. இது உண்மையில் அவைகளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சக்திமிகு வெளிப்படுத்தும் பாங்கினை வழங்குகின்றது. இவ்வாறு நிசப்தமானது உள்ளடக்கப்பட்ட உறவின் இயற்கைப்பாங்கினையும், உண்மையான அளவினையும் துல்லியமாகக் காட்டுகின்ற செவிமடுத்தலுக்கான கூர்ந்தறியும் திறனையும், ஏற்றுக்கொள்ளும் திறனையும் வேண்டிநிற்கின்ற உயிர்த்துடிப்பான தொடர்பாடலுக்கு நிசப்தம் வழிசமைக்கின்றது.

செய்திகளும், தகவல்களும் மிகுதியாகக் காணப்படும் வேளையில் தனிச்சிறப்பு அல்லது முக்கியமற்றவை அல்லது இரண்டாம் தரமான வற்றிலிருந்து தனிச்சிறப்பு மிக்கவற்றை வேறு பிரித்து அறிய வேண்டுமானால் அங்கு நிசப்தம் அவசியமாகின்றது. இது மதிப்பீடுகளினை மேற்கொள்வதற்கும், செய்திகளை பாகுபடுத்துவதற்கும் நம்பத்தகுந்த பகிரங்கப்பட்ட அறிவு மூலத்திற்கு வழிசமைக்கின்றது. ஆழ்ந்த சிந்தனை மிக்கதும், பொருத்தப்பாடானதுமான அபிப்பிராயங்களினை பகிர்ந்துகொள்ள வாய்ப்பளிக்கின்றது. முதற்பார்வையில் இணைக்கப்படாதனவாகக் காணப்படுகின்ற நிகழ்வுகளிடையே பிணைப்பினைக் கண்டறியவும் ஆழ்ந்த சிந்தனை எமக்கு உதவுகிறது. இது நிகழ்வதற்கு நிசப்தம், வார்த்தைகள், கற்பனைகள், ஒலிகள் இடையிலான நேரிய சமநிலைத்தன்மையை ஆதரவளித்துக் காப்பாற்றுகின்ற ஒருவகை சூழல் தொகுதி ஒன்றினை, பொருத்தப்பாடான சுற்றாடல் ஒன்றினை விருத்திசெய்ய வேண்டியது அவசியமாகின்றது.

விடை தேடப்படவேண்டிய வினாக்களினால் பெருமளவு ஊட்டம் பெற்றதாக இன்றைய தொடர்பாடல் செயற்பாங்கு அமைந்துள்ளது. அறிவுரை, கருத்துகள், தகவல்கள், விடைகள் போன்றவற்றை வேண்டிநிற்கும் அனேகமானவர்களுக்கு தொடர்பாடலின் தொடக்கநிலைப் புள்ளியாக தேடல் இயந்திரங்களும், சமூக வலையமைப்புகளும் மாறியுள்ளன. எமது காலத்தில் வினாக்களுக்கும், விடைகளுக்குமான ஒரு கருத்தாடலரங்காக இணையத்தளம் விளங்குகின்றது. உண்மையில் இக்கால மக்கள் முன்னரெப்போதும் கேட்டிராத வினாக்களுக்கும், அறிந்திராத தேவைகளுக்கும் சொல்லடி தரும் விடைகளை அடிக்கடி வழங்குகின்றனர். நிசப்தம் எமக்கு ஒரு பெறுமதி மிக்க பண்டமாகும். இதனூடாக எமக்கு கிடைக்கும் தரவுகளில் மிகவும் உண்மைத் தன்மை மிகு வினாக்களினை அடையாளம் கண்டுகொள்கின்றோம். அவற்றின்மீது எமது கவனத்தை ஒருமுகப்படுத்தி மிகப் பொருத்தமான பகுத்தறிதலினை பிரயோகிக்கின்றோம்.

உலகின் தொடர்பாடலின் பல்வகைமை, மற்றும் சிக்கல் தன்மை நடுவே அனேக மக்கள் மானிட இருப்பின் தெரிந்துகொள்ள முடியாத வினாக்களினை நேருக்கு நேர் எதிர்கொள்கின்றனர். நான் யார்? எனக்கு என்ன தெரியும்? நாம் என்ன செய்ய வேண்டும்? நாம் எதனை எதிர்பார்க்கலாம்? என்பனவே அவ்வினாக்கள். இத்தகைய வினாக்களை வினவுகின்றவர்களுக்கு மிகுதியான கருத்தாடல்களுக்கான வாய்ப்புகளினை ஏற்படுத்திக் கொடுப்பதுடன் வார்த்தைகள், வார்த்தைகளின் இடமாற்றுதல்கள் மட்டுமன்றி விரைவான விடையிலும் பார்க்க மிகவும் சொல்லாற்றல் வாய்ந்த நிசப்தமான ஆழ்ந்த சிந்தனைக்கான அழைப்பினையும் நாம் வலியுறுத்திக் கூற வேண்டும். அத்துடன் அவர்கள் தம் இருப்பின் ஆழத்தினை அடைவதற்கு அனுமதிக்க வேண்டும். மானிட மனங்களில் கடவுள் பொறித்து வைத்துள்ள அறிவை நோக்கிய பாதையினை அவர்களுக்குத் திறந்துவிட வேண்டும்.

அதிகரித்த அன்றேல் சொற்ப அளவிலான முக்கியத்துவம் வாய்ந்த மானிட வாழ்விற்கு அர்த்தமும், நம்பிக்கையும் தருகின்றதுமான மனித இனத்தின் அமைதியின்மை, உண்மைக்கான தேடல் போன்றவற்றினை வினாக்களின் தொடர்ச்சியான பாய்ச்சலானது விளக்கிநிற்கின்றது. இறை நம்பிக்கையற்ற அபிப்பிராயங்கள் மற்றும் வாழ்வின் அனுபவங்களின் ஆழமற்றதும், எதிர்ப்பின்றி செயற்படுகின்றதுமான பரிமாற்றத்துடன் ஆண்களும், பெண்களும் மனநிறைவு காண முடியாது. நாமனைவரும் ....

தொடர் 19ம் பக்....

செய்தி

**அனைத்துலக நற்கருணை மாநாடு**

50வது அனைத்துலக நற்கருணை மாநாடு இம்முறை அயர்லாந்தில் உள்ள டப்ளின் நகரத்தில் இடம் பெற்றது. இதில் யாழ் மாகாணத்தைச் சேர்ந்த மறையுரைஞர்களின் குழும முதல்வரும் யாழ். புனித சவேரியார் குருமட விரிவுரையாளருமான முனைவர் அருள்தந்தை ஸ்ரனி அன்ரனி பங்கேற்றார். இம் மாதம் 6ம் திகதி முதல் 9ம் திகதி வரை ஆய்வு மாநாடும், 10 முதல் 17 வரை பொது அமர்வும் இடம் பெற்றது.

உலகெங்கிலுமிருந்து சுமார், 25000 பேர்வரை இம் மாநாட்டில் பங்கேற்றதாகக் கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 09

# "அன்பின் அரசி"

## அன்னை தெரசாவின் அம்மானைக் காவியம்

1) கல்கத்தா சேரிகளில் நோய் நொடிகள் வலம் வந்தே
மக்களை வாட்டி வதைகளது செய்த வேளை
இரக்க மனது கொண்ட அன்னையின் இதயமது
இரணகளம் ஆகியே கலங்கினார் அம்மானை
சுத்தம் சுகாதாரம் கிட்டவும் இல்லாமல்
சூழ்ந்திருந்த அறியாமை தூரவே துடைத்தெறிய
தொடங்கினார் தூயபணி அன்னை தெரசாவும்
தொடர்ந்தார்கள் மக்களுந்தான் சொல்லுகிறேன் அம்மானை

2) இப்படி இருக்கையிலே நோயாலே பீடித்த
பெண்ணொருவர் படுத்திருந்தாள் அன்னையின் வாசலிலே
தூரத்தே இருந்த கேம்பல் மருத்துவ மனைக்கே
ரிக்ஷோவில் கொண்டு சென்றாரே அன்னையவர்
சென்றது தான் மிச்சம் சேர்க்கவில்லை நிர்வாகம்
கட்டிலிலே நோயாளிகள் கனபேர் இருந்ததினால்
கட்டில் இல்லை என்றே கை விரித்து விட்டதனால்
என்னதான் செய்வதென ஏக்கமுற்றார் அம்மானை.

3) கண் கலங்கிய தெரசா கடுமையாக மன்றாடியும்
கண்டபலன் இல்லாது தன் மடியில் படுக்க வைத்தார்
கண்டும் காணாதவராய் நிர்வாகம் நின்றிருக்க
பணி முடிந்து வந்த அந்த மருத்துவர் இதைக் கண்டு
சிகிச்சையது செய்ய சித்தமது கொண்ட வேளை
அன்னையின் மடியினிலே அப் பெண்ணும் மரித்தாளே
அந்த ஒரு சம்பவமே அன்னை தெரசாவுக்கு
ஆஸ்பத்திரிகள் அமைக்கக் காலானது அம்மனை.

4) எப்பாடு பட்டாவது மருத்துவமனை அமைத்து
மக்களின் நோய் தீர்க்க மனமது கொண்டாரே
ஆரம்பக் கட்டமாக மருந்துக் கடை ஒன்றை
பள்ளி வளாகத்திலே பக்குவமாய் அமைத்தார்
இலவசமாகவே மருந்துகள் பெற்றுமவர்
ஏழை மக்களுக்காய் இரவு பகல் பாராமல்
மருத்துவம் செய்ததால் மாசற்ற அன்னையும்
மக்களது மனம் நிறைந்து வாழ்ந்தாரே அம்மானை.

5) பள்ளியொடு மருந்தகம் தையல் நிலையமென
தாபித்தார் ஒரு வருட காலமது தன்னிலே
இவைகளை நடாத்துவதில் சிரமங்களிருந்தும்
தளரா மனதுடன் தன் பணி தொடர்ந்தாரே
நல் மனதுடைய நன் கொடையாளர்கள்
நம்பிக்கை கொண்டதால் நல்கினர் நிதியுமே
நாலா பக்கமும் அன்னை தெரசா புகழ்
அதிகரித்தவாறே இருந்ததே அம்மானை.

6) ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பது அக்டோபர்
மிஷனரிஸ் ஆஃப் சாரிட்டிஸ் என்றதான
அறக்கட்ட்ளை ஒன்றை அன்னை அமைத்திட
அதிலே உறுப்பினர் பதின்மூன்று பேர் இருந்தனர்
அந்த நிதியத்தில் உறுப்பினர் அதிகரித்தே
அண்ணளவாக ஐயாயிரம் பேர் இன்றே
அதிகரித்துள்ளதை அகிலமே அறியுமென
நம்பிக்கையாகவே செப்பினேன் அம்மானை.

- தொடரும்....

**கலைக்கோட்டன்.அ. இருதயநாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## திருச்சபையும் அரசியலும்

கடந்த சில வாரங்களாக எமது பத்திரிகைகளில் வெளியாகும் பரபரப்பான செய்தி நமது சிந்தனைக்கு விருந்தாகின்றது. பௌத்த துறவிகளும் ஏனைய மதங்களின் குருக்களும் அரசியலில் ஈடுபடக்கூடாது எனச் சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என அமைச்சர் ஒருவர் பாராளுமன்றத்தில் கூறியுள்ளார். இதுபற்றி இன்றுவரை இலங்கை பூராகவும் பல மட்டங்களிலும், பல தரப்பிலும் காரசாரமாகக் கருத்துகள் சார்பாகவும் எதிராகவும் முன்வைக்கப்பட்டு விவாதிக்கப்பட்டு வருவதை அறிவோம். இதற்கான அடிப்படைக் காரணம் சில பௌத்த துறவிகள் கட்சி சார்பான அரசியலில் நேரடியாக ஈடுபட்டுள்ளமைதான் என்பது வெள்ளிடைமலை.

இந்நிலையில் அரசியலைப் பொறுத்தளவில் கத்தோலிக்க திருச்சபையின் நிலைப்பாடு என்ன என்பதை நாம் தெளிவுபடுத்த வேண்டியது அவசியமாகின்றது. அதற்கு முன்னர் எது அரசியல்? எது அரசியல் இல்லை என்பதையும் வரையறை செய்துகொள்வது நல்லது. "நாட்டுக் குடி மக்களாக அமைகின்ற தனிமனிதர்களும், குடும்பங்களும், வெவ்வேறு குழுவினரும் முழுமையான மனிதத் தன்மை வாய்ந்ததொரு வாழ்க்கையை உருவாக்கத் தம் சொந்த ஆற்றலால் மட்டும் முடியாது என்பதை உணர்ந்து, வெவ்வேறு அமைப்பு வடிவங்களைக் கொண்ட அரசியல் சமூகங்களான நாடுகளை உருவாக்குகின்றன". (2ம் வத். இன்றைய உலகில் திருச்சபை – 74) என இரண்டாம் வத்திக்கான் சங்கம் அரசியல் சமூகம் பற்றிக் கூறுகிறது. இவ்விதமாகத் தங்களுக்குப் பொருத்தமான ஆட்சிமுறையை அமைப்பதும் ஆட்சியாளர்களை அமர்த்துவதும் குடிமக்கள் சுதந்திரமாக நிர்ணயிக்கும் காரியங்களாகும்.

தங்களுக்கிருக்கும் வாக்குரிமையைச் சுதந்திரத்தோடு செயல்படுத்த எல்லாக் குடி மக்களுக்கும் உரிமை மட்டுமன்று கடமையும் உண்டு என திருச்சபை வலியுறுத்துகின்றது. அதே வேளையில், திருச்சபை எந்த ஓர் அரசியல் கொள்கை அமைப்புக்கும் கட்டுப்பட்டதும் ஆகாது. திருச்சபைக்கென்று ஒரு தனிப்பட்ட பணிப் பொறுப்பும் பணித்தகுதியும் உண்டு.

"மீட்பரின் அன்பை அடித்தளமாகக் கொண்டுள்ள திருச்சபையோ ஒவ்வொரு நாட்டின் எல்லைகளுக்குள்ளும் நாடுகளுக்கிடையேயுமுள்ள நீதியும் அன்பும் விரிவாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரவி ஓங்கிடத் துணை புரிகிறது. தனது படிப்பினையாலும் கிறிஸ்தவர்கள் வழங்கும் சான்றினாலும் திருச்சபை மனித ஈடுபாட்டின் அனைத்துத் துறைகளையும் ஒளிர்விக்கின்றது. இவ்வாறு திருச்சபை குடி மக்களின் அரசியல், சுதந்திரம் மற்றும் பொறுப்புணர்வுகளையும் மதித்து ஏற்றுக் கொண்டு மேம்பாடடையச் செய்கின்றது" (இன்றைய உலகில் திருச்சபை – 76)

நாம் வாழும் சமூகம் என்பது அரசியல், பொருளாதாரம், சமயம், பண்பாடு, கல்வி, கலாசாரம் போன்ற அமைப்புகளால் உருவாக்கப்பட்டது. இத்தகைய சமூக அமைப்புகளில் சிந்தனைகளும் செயற்பாடுகளும் நமது அன்றாட வாழ்வை உருவாக்குவதாகவும் உருக்குலைப்ப தாகவும் அமைகின்றது. உதாரணமாக, அரசியல் அமைப்பை எடுத்துக்கொண்டால் அதன் செயற்பாடுகள் மனித வாழ்விற்குச் சாதகமாக அமைகின்றதா? அல்லது மனித மதிப்பீடுகளை புறக்கணிப்பதாக அமைகின்றனவா என்பதற்கான தேடல்கள் எமது பொறுப்பாகின்றது, உரிமையா கின்றது, அவசியமாகின்றது. அதனை நாம் அரசியல் ஈடுபாடு என்கிறோம்.

ஓர் அரசு எல்லா மக்களுக்கும் சம உரிமை அளிக்காவிட்டால் அப்படிப்பட்ட அரசாலோ, அங்கிருக்கும் சுதந்திரத்தாலோ எந்தப் பயனும் இல்லை. சுதந்திரம், சமத்துவம், சகோதரத் துவம் ஆகிய மூன்றும் இருக்கக் கூடியவகையில் மக்களாட்சி அமைய வேண்டும். இவற்றையெல்லாம் அளிக்கின்ற, பாதுகாக்கின்ற அமைப் பாகத்தான் அரசு இருக்கவேண்டும். ஆட்சி அதிகாரத்தைத் தீர்மானிக் கின்ற ஆற்றல் சகல குடிமக்களுக் கும் உண்டு. எனவே, அனைவரும் தங்கள் சக்தியை ஆக்கந்தரும் வகையில் பயன்படுத்தலாம். சமூக, அரசியல் உரிமைகளின் முன்னேற் றத்துக்காகப் பயன்படுத்தலாம். சமுதாயத்தில் நீதியை நிலைநாட்ட பொது நிலையினருக்கு ஊக்குவிப்பு அளிக்கப்பட வேண்டும்.

பேரருட்தந்தை **பொன்னையா யோசப்** ஆண்டகை



இன்றைய நம் சமூகத்தில் உள்ள அநீதிகளுக்கு எதிரான முயற்சிகளில் போராட்டங்களில் திருச்சபை வெறும் பார்வையாளராக இருக்கமுடியாது. மாறாக, அவற்றில் பங்கேற்றாக வேண்டும். அரசின் சட்டதிட்டங்களே பல வேளைகளில் அத்தகைய அநீதிகளுக்கு அடிப்படைக் காரணமாக இருக்கும் போது அரசியல் ஈடுபாட்டிலிருந்து திருச்சபை ஒதுங்கிக் கொள்வது தன் கடமையில் தவறுவதேயாகும். முழுமையான கட்சி அரசியலைத் திருச்சபை தவிர்க்கலாம். ஆனால், அரசியல் ஈடுபாட்டை அது தவிர்க்க இயலாது. ஏனெனில், எத்தகைய அரசியல் ஈடுபாடுமின்றி இருக்கும் நிலையும் ஒரு வகையில் அரசியல் ஈடுபாடே. ஏனெனில் அது இன்றிருக்கும் ஆட்சி முறையையும் அநீதிகளையும் மறைமுகமாக ஆதரிப்பதே. ✹

4ம் பக்கத் தொடர் ....

வகித்து, தேசிய அளவிலும், ஆசிய அளவிலும் பெரும் பணிகள் புரிந்து, ஆயராகி, கிழக்குப் பிரதேசத்தை ஏறத்தாள மூன்று தாசாப்த காலமாக வழிநடத்தி மேம்படுத்திய அவருக்கு நன்றிகூற வார்த்தைகளே இல்லை. அவரது நகைச்சுவையான பேச்சும், ஆயனுக்கும் ஆடுகளுக்குமிடையே நிலவிய தூரங்களைக் குறைத்த எளிமையும் எல்லை தாண்டிய மனித நேயமும் அவரை அனைவரது மனங்களிலும் சிம்மாசனமிட்டு அமர வைத்திருக்கிறது.

தற்போது கிழக்கின் தலைநகரமாக விளங்கும் திருகோணமலை மறைமாவட்ட ஆயராகத் தம் பணியைத் தொடரும் ஆண்டகை அவர்கள் எதிர் காலத்தில் நாட்டின் சமய சமூக அரசியல் நிகழ்வுகளுக்கிடையே தூர நோக்கோடு தமது மக்களைப் பாதுகாத்து, விசுவாச வாழ்வில் வளர்த்தெடுக்க வேண்டிய அருளையும், திடத்தை யும், நலத்தையும் இறைவன் அளித்திட வேண்டு மென்று இறைஞ்சுகிறோம், வாழ்த்துகிறோம்.

✹



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இம்முறை "தொண்டனின் சில நிமிடங்களுக்காக", அருட்பணி.A. A. நவரெட்ணம் [நவாஜி] அடிகளாரைச் சந்தித்தோம். பனிச்சையடி – திராய்மடு பங்குத் தந்தையாகவும், கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளராகவும் பணியாற்றும் அடிகளார் அவர்கள் மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் "பல்சமய உரையாடல்" அமைப்பின் தலைவராகவும் செயற்படுகின்றார். எனவே, பாரிய வேலைப் பழுவின் மத்தியில் எமக்கான நேரத்தை அவர் ஒதுக்கித்தந்திருந்தார்.

**அருட்தந்தை அவர்களே பல்சமய உரையாடல் அமைப்பின் நோக்கம் செயற்பாடுகள் பற்றி சற்றுச் சொல்வீர்களா?**

அகில இலங்கை ரீதியாக சகல மறைமாவட்டங்களிலும் "கிறிஸ்தவ ஒன்றிப்பும் பல்சமய உரையாடலும்" என்னும் பிரிவு இயங்கி வருகின்றது. ஆனால், எமது மறை மாவட்டத்தில் "கிறிஸ்தவ ஒன்றிப்பு" ஓர் அருட்தந்தையின் பொறுப்பிலும், "பல்சமய உரையாடல்" எனது பொறுப்பிலும் இயங்கி வருகின்றது. கிறிஸ்தவ ஒன்றிப்பானது பல்வேறு கிறிஸ்தவப் பிரிவுகளினதும் ஒற்றுமை தொடர்பான பணிகளை மேற்கொள்ள பல்சமய உரையாடலானது, சமயங்களின் சமரசம், இன நல்லிணக்கப்பாடு தொடர்பாகப் பணியாற்றி வருகின்றது. இலங்கையில் கிழக்கு மாகாணமானது தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் சம அளவில் வாழும் பல்லினத் தன்மை கொண்ட மாகாணமாகும். எனவே, நல்லிணக்கப் பணியின் முக்கியம் கருதி "பல்சமய உரையாடல்" தனிப் பிரிவாக இயங்குகின்றது.

**சமாதானத்திற்கான சமயங்களின் இலங்கைப் பேரவை (SLCRP) என்னும் அமைப் பொன்றும் உள்ளதல்லவா?**



ஆம்! இதன் தலைவராக பேராசிரியர் வெல்லம்பில் விமலரத்ன தேரர் அவர்கள் உள்ளார். இவ்வமைப்பின் ஆரம்ப கர்த்தாவாக எமது ஆயர் பேரருள் திரு. யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையவர்கள் உள்ளார்கள் என்பது பெருமைக்குரிய விடயம். தற்போது இவ்வமைப்பின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவராக எமது ஆயர் அவர்களும், இணைத் தலைவர்களாக மட்டக்களப்பு இராமகிருஷ்ணமிசன் தலைவர் அவர்களும், காத்தான்குடி ஜமீயத் துல்லாமாவின் தலைவர் அவர்களும், அம்பிட்டிய சுமணரத்தின தேரோ அவர்களும் உள்ளார்கள். சுமார் 60 உறுப்பினர்கள் இதில் இணைந்து பணியாற்றுகின்றார்கள். மாதத்திற்கொரு தடவை கூட்டம் இடம் பெறுகின்றது. மட்டக்களப்பைப் பொறுத்தவரையில் எமது "பல்சமய உரையாடலுக்கான அமைப்பும்", சமாதானத்திற்கான சமயங்களின் இலங்கைப் பேரவையின் மட்டக்களப்புக் கிளையும் மிகவும் கைகோர்த்துப் பணிபுரிவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

**இவற்றில் சில செயற்பாடுகள் பற்றிச் சொல்லுங்களேன்.....?**

2011ம் ஆண்டில் "சமய நல்லிணக்கம்" என்னும் தொனிப்பொருளில் சித்திரம்,கட்டுரை, பேச்சுப் போட்டிகளைக் கிழக்கு மாகாண மட்டத்தில் நடத்தினோம். காத்தான்குடி ஹிஸ்புல்லா இஸ்லாமிய கலாசார மண்டபத்தில் சமாதானப் பெருவிழாவும் மலர் வெளியீடும் இடம்பெற்றன. அத்துடன், ஒல்லிக்குளம் போன்ற எல்லைக் கிராமங்களில் இலவச மருத்துவ முகாம்களை ஏற்பாடு செய்தோம். இதன் அடிப்படை நோக்கமாக மருத்துவ முகாமை விட பல்சமய மக்களின் சந்திப்புதான் பிரதான இடத்தைப் பிடித்திருந்தது. குறிப்பாக அண்மையில் இடம்பெற்ற சிலை உடைப்புகள் தொடர்பில் இன முரண்பாடுகள் உண்டாக வாய்ப்பு இருந்ததென்றாலும், எமது முயற்சியால் பல்வேறு சந்திப்புகளை ஏற்படுத்தி, கூட்டறிக்கைகள் பலவற்றை வெளிப்படுத்தி, முரண்பாடுகளைத் தவிர்க்க வைத்த இடைத் தரகராக நாம் செயற்பட்டிருக்கின்றோம்.


எல்லாச் சமய விழாக்களையும் எல்லாரும் இணைந்து கொண்டாடுவதன் மூலமும் சமய நல்லிணக்கம் ஏற்பட வாய்ப்புண்டாகின்றது.

**இளைஞர்கள் தொடர்பில் எவ்வாறான செயற்பாடுகளைச் செய்கின்றீர்கள்?**

இளைஞர் சிறகம் (Youth Wing) என்னும் அமைப்பினை உண்டாக்கியுள்ளோம். முப்பது அங்கத்தவர்கட்கு இலங்கை மன்றக் கல்லூரியில் தலைமைத்துவப் பயிற்சி வழங்கியுள்ளோம். தொழில் வழிகாட்டல், ஆலோசனைக் கருத்தரங்குகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. சர்வோதயத்தின் உதவியுடன் அருள்ஒளி இல்லத்தில் ஆங்கில, சிங்கள வகுப்புகள் இடம்பெறுகின்றன. இது ஆறுமாதகாலப் பயிற்சி நெறியாகும். இதில் தமிழ், முஸ்லிம் இளைஞர்கள் பயிற்சி பெறுகின்றனர். மொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## குறும்(புப்)பா – 92

மாலைமரி யாதைபுகழ் வேண்டும்
மாளிகையும் வாகனமும் வேண்டும்
ஓலையறி வில்லையொழுங் கானபண்பு களுமில்லை
நாளையிவர் நம்தலைவர் கள்

~ மலர் ~

யறிவைப் பெறுவதைவிட அவ்விளைஞர்களின் நட்பு, புரிந்துணர்வுடன் பழகுதல் என்பதுதான் எமது முக்கிய இலக்கு.

**பெண்கள் தொடர்பான செயற்பாடுகள் ஏதும் உண்டா?**

பெண்கள் அமைப்பொன்றையும் ஏற்படுத்தியுள்ளோம். இன்னொரு விடயத்தையும் இவ்விடத்தில் குறிப்பிடவேண்டும். எமது அமைப்பை ஓர் அரசு சார்பற்ற நிறுவனமாக (N.G.O) பலரும் கருத்தில் கொண்டுள்ளார்கள். திட்டவட்டமாகச் சொல்கின்றேன், இது ஒரு N.G.O அல்ல. பல்சமய உரையாடலை வித்தாகக் கொண்ட, சமூகங்களை விழிப்புணர்வுக் கருத்தரங்குகள், புரிந்துணர்வு என்பனவற்றின் மூலம் இணைக்கும் செயற்பாட்டைச் செய்கின்ற அமைப்பு.

**உங்கள் அமைப்பில் வேறு உத்தேசப் பணிகள் பற்றி....?**

ஆகஸ்ட் 25ம் திகதியன்று மட்டக்களப்பு இசை நடனக் கல்லூரி மண்டபத்தில் புத்தக வெளியீட்டு விழாவொன்றை ஏற்பாடு செய்யவுள்ளோம். எட்டாம், ஒன்பதாம், பத்தாம் வகுப்பு மாணவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் இலங்கையின் பிரதான நான்கு சமயங்களைப் பற்றியும் அப்புத்தகத்தில் விளக்கப்பட்டுள்ளது. இதனால் பிள்ளைகள் மட்டத்திலிருந்தே சமயப் புரிந்துணர்வு ஏற்பட வாய்ப்புண்டு.

**விஷேடமாக ஏதும் குறிப்பிட விரும்புகின்றீர்களா?**


கத்தோலிக்க திருச்சபையின் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் பயனாக வேற்றினங்கள், சமயங்கள் என்பனவற்றின் பண்பாடு முக்கியம் பெற்றது. பின்னர் கிறிஸ்தவமல்லாத மறைகளுடன் தொடர்பு எனும் தீர்வுத்தொகுப்பு வெளியிடப்பட்டது. யூத மதத்துடன் தொடர்பு பின்னர், இஸ்லாம் மதத்துடன் தொடர்புபென்றவாறு ஏனைய மதங்களுடன் தொடர்புகொள்ள வேண்டிய அவசியம் உணர்த்தப்பட்டுள்ளது.

குறிப்பாக, ஆசியப் பின்னணிக்கு இது முக்கியம் வாய்ந்தது. ஆசிய ஆயர் பேரவை இதன் முக்கியத்துவம் பற்றி குறிப்பிட்டுள்ளது. ஏழைகளுடன் உரையாடல், சமய உரையாடல், பண்பாட்டுரையாடல் என்பன முக்கியமான செயற்பாடுகள் என அப்பேரவை குறிப்பிடுகின்றது. எனவேதான், நாம் பொங்கல் விழாவை இயேசுவிற்கான நன்றி விழாவாகவும், தீபத்திருநாளை இயேசு பாவத்தை அழித்த விழாவாகவும் அனுட்டிக்கின்றோம். நாம் வீட்டை விட்டு வெளியே வந்தால் அயல் வீடு, கிராமம், வேலை செய்யுமிடம், ஒன்று கூடுமிடம் என்றெல்லாம் பார்க்கும்போது பல்வேறு சமயங்கள், இனங்களுடன் இணங்கிப் போகவேண்டியுள்ளது. ஏன், சில வேளைகளில் நம் வீட்டிற்குள்ளும் இவ்வகை நிலைமை காணப்படலாம்.

எனவே, பல்சமய உரையாடல் அவசியமாகின்றது. எமது மாவட்டத்தில் இது வெற்றிகரமாக அமைவதற்கு உற்சாகம், ஊக்கம் என்பன கொடுத்துவரும் எமது ஆயர் பேரருள் திரு. யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களே பிரதான காரணம் என்றால் அது மிகையாகாது.

*பொறுமையாக, விளக்கமாகச் செவ்வி தந்த அருட்பணி A. A. நவரெட்ணம் அவர்களுக்கு தொண்டனின் சார்பில் நன்றிகூறி விடை பெற்றுக்கொண்டோம்.*

- வருந்துகிறோம் -




*கடந்த ஜூலை இதழில் வெளிவந்த* ***"பிரெஞ்சு எழுத்தாளர் விக்டர் ஹியூகோ"***
*என்னும் கட்டுரையை எழுதியவர்*
***அருள்தந்தை ஜோர்ஜ் திசாநாயக்கா*** *அவர்கள்.*
*பெயர் விடுபட்டுப்போனமைக்கு வருந்துகின்றோம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைக்கல்வியும் ஊடகங்களும்




**கா**லத்தின் சுமைகள் அதிகமாகி இதயத்திலும் உடலிலும் வடுக்களும், காயங்களும் கனத்துப் போய் எதிர்காலமே பூச்சியமாகி மனிதப் பிறவியில் ஏன் பிறந்தோம், இனி இழப்பதற்கும், துறப்பதற்கும், அடைமானம் வைப்பதற்கும் உயிர் மாத்திரமே உண்டு என்ற மனநிலையோடு மனிதப் பிறப்பையே வெறுத்து வாழும் இவ்வுலகில், பாலைவனச்சோலையாய், மலையில் பூத்த குறிஞ்சி மலராய் மலர்ந்து எதிர்காலம் குறித்த நம்பிக்கையை ஊட்டுவதுதான் மறைக்கல்வியாகும்.

இந்த மறைக்கல்வி இன்றும் என்றும் பொருள் உள்ளதாய் இருப்பதற்குக் காரணம் ஒன்று உண்டு. அது என்னவென்றால், மனிதன் தன்னிலும், பிறரிலும் இழந்துபோன நம்பிக்கையை மீண்டும் துளிர்விடச் செய்வதும், உலகின் இறுதிநாள் வரைக்கும், உயிர் உள்ளதாயும், சொன்னதைச் செய்வதாயும், ஆற்றல் வாய்ந்ததாய், இரு பக்கமும் வெட்டக்கூடிய எந்த வாளினும் கூர்மையானதுமாயிருக்கும், 'இறை வார்த்தை' தானது. இந்த இறைவார்த்தைதான் மறைக் கல்வியின் அத்திவாரமும் ஆணிவேருமாகும். எம் திருத்தந்தை 16ம் பெனடிக்ட்



அவர்களின் "ஆண்டவரின் அருள்வாக்கு 2010" எனும் அறிவுரை ஏடு சொல்கிறது: மறைக் கல்விக்கு இறைவார்த்தை எந்தவகையில் ஊற்றாக அமைந்துள்ளதென்றால் "விவிலியம் கடவுளின் வார்த்தையைக் கொண்டுள்ளது, அது என்றும் உயிர் உள்ளது என்பதை மறைக் கல்வி வழியாக எடுத்தியம்பவேண்டும்" இவ்வாறு மறைக் கல்வியும், இறைவார்த்தையும் எப்படி ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்துள்ளது என்பதைக் காண்பிக்கிறார் எம் திருத்தந்தை.

ஏனெனில், மறைக்கல்வி என்பது இறை மாண்பை எடுத்துச் சொல்லி மனித மாண்பிற்கு அழைத்துச் செல்லும் ஒன்று. அறிவிக்கப்படும் நற்செய்தியை அனுபவ இயேசுவாக மாற்றுகிறது மறைக்கல்வி. இந்த மாண்புள்ள மறைக்கல்வியின் உண்மையை உயர்த்தி அதன் மகத்துவத்தை எடுத்துச் சொல்லி உலகெல்லாம் இயேசுவின் நற்செய்தியைப் பறைசாற்ற" இந்திய ஆயர்களுடன் இணைந்து 2012ம் ஆண்டில் எம் மறைமாவட்டமும் "எல்லோருக்கும் மறைக் கல்வி" எனும் தொனிப்பொருளில் மறைக்கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்கிறது.

இயேசு விண்ணேற்பு அடையுமுன் தம் திருத்தூதர்களுக்குச் சொன்ன கட்டளைதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உலகெங்கும் சென்று படைப்பிற் கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற் றுங்கள்" (மாற் 16:15) இவ் வார்த்தை தான் திருச்சபையின் அனைத்துப் பணிகளினதும் அடிப்படை. இந் நற்செய்தியைத்தான் இயேசு சொல்கிறார்: 'காதோடு காதாய்க் கேட்பதை வீட்டின் மேல் தளத்தி லிருந்து அறிவியுங்கள்' (மத் 10:27) ஏனெனில், நற்செய்தி என்பது அனைத்து மக்களுக்கும், அனைத்து சூழலிலும், அனைத்துப் பணிகளி லும் அறிவிக்கப்பட வேண்டும்.

"கத்தேகேஸிஸ்" என்ற மூலச் சொல் மறைக்கல்விக்குப் பயன்படுத்தும் சொல்லாகும். இச் சொல்லின் பொருள் "அறிவித்தல், அறிவுறுத்தல், விளக்கம் கொடுத் தல்" என்று பொருள் கொள்கிறது.

"ஆண்டவரின் திருப் பெயரை அறிக்கையிட்டு மன்றாடுகின்ற எவரும் மீட்பு பெறுவர். ஆனால், அவர் மீது நம்பிக்கை கொண்டிருந் தாலன்றி அவர்கள் எவ்வாறு அவரை நோக்கி மன்றாடுவர்? தாங்கள் கேள்வியுறாத ஒருவர் மீது எவ்வாறு நம்பிக்கை கொள்வர்? அறிவிக் கப்படாத ஒன்று பற்றி அவர்கள் எவ்வாறு கேள்வியுறுவர்? அனுப்பப் படாமல் அவர்கள் எவ்வாறு அறிவிப்பர்?" (உரோ 10:11, 13:15) இவ்வாறு இயேசுவின் நற்செய்தி பரவி இயேசுவில் நம்பிக்கை கொள்வ தென்றால் அறிவிக்கப்பட வேண்டும். இப்பணியை இன்று சிறியவர் தொடங்கி முதியவர் வரைக்கும் படிப் படியாகச் செய்து கொண்டிருப்பது மறைக்கல்வியாகும்.

இப்பணியைத் திறம்படச் செய்து முடிக்க இன்று கைகொடுத்து நிற்பதுதான் ஊடகங்கள். இன்று ஊடகங்கள் இல்லாத மனித வாழ் வைக் கற்பனை செய்து பார்ப்பது கடினம். இவ்வூடகங்கள் நமது வாழ்வையே ஆக்கிரமித்து நிற்கின் றன. இக்காலத்தில் ஒரு டிஜிற்றல் காற்றைத்தான் சுவாசித்துக் கொண்டி ருக்கின்றோம். இவ்வூடகங்களை நோக்கும் போது மானிட சௌகரியத் தையும் மனிதகுல முன்னேற்றத் தையும் கருத்தில் கொண்டே விஞ்ஞானிகளால் இவைகள் கண்ட றியப்பட்டன. எனினும், இந்த ஊடகங்களைப் பயன்படுத்தும் முறையிலும், நோக்கிலும் தவறான இலக்குகள் இருக்குமெனின் பாரிய சீர்கேடுகள் தோன்றும்.

ஊடகங்கள் குறித்து 1990ம் ஆண்டு 30வது உலகத் தொடர்பு தினச் செய்தியில் 2ம் அருள் சின்னப்பர் (முன்னாள் திருத்தந்தை) இப்படிக் கூறுகிறார்: "கத்தோலிக்க திருச்சபையானது தொடர்பு சாதனங் களின் நண்பனாக இருக்க விரும்பு கிறது" மீண்டும் அவர் கூறுகையில் "இந்த ஊடகங்கள் இன்றைய உலகில் மிகவும் ஆற்றல் பெற்று விளங்குகின்றன. அதை ஆக்கத் திற்குப் பயன்படுத்த வேண்டும். ஒரே நேரத்தில் பல இலட்சம் மக்களைச் சென்றடையக் கூடிய அச்சாதனங் கள் மூலம் மறைபரப்புப் பணியாற்று வது நற்செய்திப் பணிக்கு ஒரு புதிய பரிமாணத்தைத் தருவதாகும். ஆனால், இவ்வூடகங்களை முறை யாகப் பயன்படுத்தினால்தான் அவை நம்பிக்கையின் அறிகுறிக ளாக விளங்கும்".

ஊடகங்களுக்கும் மறைக் கல்விப் பணிக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. ஏனெனில், ஒவ்வோர் ஆண்டும் இயேசுவின் விண்ணேற்பு விழாவன்று கத்தோ லிக்க திருச்சபையானது "தொடர்பு தின விழா"வைக் கொண்டாடுகிறது. இயேசு விண்ணேற்பு அடைய முன்பு தமது திருத்தூதர்களுக்குக் கொடுத்த கட்டளை "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்" (மாற் 16:15) என்ப தாகும். எனவே, ஊடகங்கள் வழி நின்று மறைக்கல்விப் பணியாற்று வது பெரும் வெற்றியைத் தரும். இன்று ஊடகங்கள் பிரமாண்டமான வளர்ச்சியைக் கண்டுள்ளதால் அதன் அளப்பரிய சக்தியைக் கண்டு கொண்ட திருச்சபை தன் உயிர் மூச்சான மறைக்கல்விப் பணிக்கு ஊடகங்களை முடிந்தளவு பயன் படுத்துகிறது.

இதனால்தான் ஊடகத் துறையைச் சரியாகப் பயன்படுத்து வது எப்படி என்றும், அது பற்றி கற்பிப் பதில் முழுக் கவனம் எடுப்பது தனது கடமை எனவும் கூறி சங்க ஏட்டில் கூட அதற்கு ஓர் இடம் கொடுத்துள்ளது. அத்துடன் அதற்கென்று சர்வதேச ரீதியில் ஓர் அமைப்பை நிறுவி வருடத்தில் ஒரு நாளை உலகத் தொடர்பு நாளாக அறிவித்து, விழா எடுத்து ஊடகங் களை நற்செய்திப்பணிக்காக உள் வாங்கியிருக்கின்றது. இந்த ஊடகத் துறை ஒழுங்காக முறையாக பயன் படுத்தப்படுமானால் மனித சமூகம் நீதியும், பிறரன்பும், மனித நேயமும், ஒழுக்கமும் கொண்ட சமூகமாக நிலைத்து நிற்க முடியும். ஆனால், இக்காலங்களில் ஊடகங்கள் மறைக்கல்விப் பணிக்கு பெரும் சவாலாகவே விளங்குகின்றன.

இன்றைய பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி, தொலைபேசி, கையடக்கத் தொலைபேசி, இன்ரனெற் என்பன வற்றின் மூலம் பல நன்மைகள் உள்ளன. நேரச்சுருக்கம், விரைவு, பல நாட்டு விடயங்களில் விரிவு, வீட்டி லிருந்தே சகலத்தையும் அறிந்து கொள்ளல், மாணவர்களின் கல் விக்கு முழு ஒத்துழைப்பு, ஆராய்ச் சிகளின் விரைவு இப்படிப் பல. இந்த ஊடகங்கள் உலகையே சுருக்கி கைக்குள் வைத்திருக்கின்றன. ஆயினும், நன்மையிலும் பன் மடங்கு பாரதூரமான தீய விளைவுகளும் ஏற்படுகின்றன. மனித நேயம் இன்மை, வன்முறைக் கலாசாரம், குடும்பப் பிரிவுகள், ஆபாசம், ஒழுக் கச் சீர்கேடுகள், மூட நம்பிக்கைகள், பெண்ணடிமைத்தனம் போன்றவை ஊடகங்கள் வழி பரப்பப்படுகின்றன. பெற்றோர்களின் அறிவுரைகளை விட, ஆசிரியர்களின் வழிநடத்தல்களை

தொண்டன் இதழில் தொடராக வெளிவந்துகொண்டிருக்கும் "புனித ஆசிர்வாதப்பரின் வரலாறு", "பாஸ்கா நாடகங்கள்", இட நெருக்கடி காரணமாக இந்த இதழில் இடம்பெறவில்லை. வரும் இதழ்களில் தொடரும் என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட ஊடகங்களின் வழிநடத்தலே இன்று மனிதனில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இயேசுவின் இறையரசுப் பணியை வளர்த்திடவும் மாண்புள்ள சமூகமாக, ஒழுக்கம் நிறைந்த சமூகமாக மானுடத்தை மாற்றவுங் கூடிய சிறப்புடைய மறைக்கல்வி இப் பொறுப்பை விரைவாக, வெற்றிகரமாக, திருப்தியாகச் செய்வதற்கு ஊடகங்களைச் சிறந்த முறையில் பயன்படுத்த முடியும். அதற்கு, பல்லூடகத் தொடர்பாடலின் வழி நின்று அதன் அதிகரித்தளவிலான வலைப்பின்னலின் துணை கொண்டு மறைக்கல்விப் பணியாற்றினால் வெற்றி பெறுவது திண்ணமாகும்.

வாய்மொழி மூலம் பறைசாற்றிய நற்செய்தியை ஊடகங்களைப் பயன்படுத்தி செயற்படுத்தும் போது போதிக்கப்பட்டதை கண்களால் பார்க்கவும் உணரவும், இறைவார்த்தையை நோக்கி கவர்ந்திழுக்கவும் மறைக்கல்வியின் உலகளாவிய திட்டங்களைச் செயற்படுத்தவும் இவ்வூடகங்கள் உதவியாய் இருக்கின்றன.

எம் மீட்புக்காக எம்மைத் தேடி வந்த நித்திய குமாரன் இயேசுவைப் பற்றிய நற்செய்தியை பார்ப்பதாலும் கேட்பதாலும் கிடைக்கும் மன அமைதியும், நிறைவும் அளப்பரியது. இந்த அளப்பரிய சேவையை ஊடகங்கள் செய்கின்றன. "இன்றைய ஊடகங்களைக் கொண்டுதான் நற்செய்திப் பணி செய்யவேண்டும். நேற்றைய ஊடகங்களைக் கொண்டு இன்று நற்செய்திப் பணி செய்தால் அது முழுமையான பயனை அளிக்காது. ஏனெனில், இக்காலமானது ஒவ்வொரு நிமிடத்திலும் புதியதையே எதிர்பார்க்கும் காலமாக இருக்கிறது. அதனால், திருச்சபையும் ஊடகங்களும் இணைந்து செயற்பட்டால்தான் எல்லோருக்குமான மறைக்கல்வி எல்லோருக்கும் சென்றடையும்.

இன்று மறைக்கல்வி தொடர்பான அனைத்துத் தகவல்களையும் கற்பிக்கும் ஆசிரியரிடமோ அல்லது பெற்றோரிடமோ மட்டும் தெளிவாகப் பெற்றுக்கொள்ள இயலாது. ஆனால், இன்று ஓர் இணையத்தளத்திற்குச் சென்றால் உலகத் திருச்சபை, இறைவார்த்தை, புராதனகால விளக்கங்கள், தலத் திருச்சபைச் செய்திகள், ஒலி ஒளிச் செய்திகள் என பல கோடித் தகவல்கள் அனைத்தையும் நொடிப் பொழுதில் பெற்று, சரியான மறைக்கல்வியை அளிக்க ஊடகங்கள் பெரும்வாய்ப்பாக இருக்கின்றன. அத்தோடு, மின்னஞ்சல் மூலம் நோயாளர்களுக்காகச் செபித்து குணம் பெறவும், செய்தி அனுப்பவும், நலிந்தவர்களை இனங்கண்டு அறப்பணி செய்யவும், வழிபாடுகளில் பங்குபற்றி அமைதியடையவும் இன்று ஊடகங்கள் உதவுகின்றன.

செ. லூாசியா,
இல.11/3, 7ம் குறுக்கு,
கல்லடி டச்பார்,
மட்டக்களப்பு.

இயேசு இயற்கை, உவமைகள் போன்ற ஊடகங்கள் வாயிலாக நற்செய்திப் பணியை, மறையறிவைப் புகட்டினார். இக்கால மாணவ மாணவியருக்கும், ஊடகங்கள் வாயிலாக மறைக்கல்வியைப் புகட்டுவதால் அவர்களுக்கு ஞாயிறு மறைக்கல்வியில் ஓர் ஆர்வமும் விருப்பமும் ஏற்படும். வீடுகளில் இருந்தவாறே அனைத்துத் தரவுகளையும் பெற்றுக் கொள்ளலாம். அடிக்கடிவரும் விசுவாசக் குறைவுகளையும் தீர்த்துக் கொள்ளலாம்.

இக்காலங்களில் காலையில் கண்விழித்தது தொடக்கம் ஒவ்வொரு வீட்டிலும் தொலைக்காட்சிப் பெட்டியை நற்கருணைப் பேழையாய் நினைத்துக் குடும்பமே மண்டியிட்டுக் கிடக்கின்றது. இதனால் குடும்பச் சீர்கேடுகள் அதிகரித்த வண்ணமே உள்ளன. மாறாக, இதே ஊடகங்களை விசுவாச வாழ்விற்காகத் திறந்து விடுவோமானால் இன்று எத்தனை குடும்பங்கள் சாட்சியுள்ள குடும்பங்களாக மாற முடியும்! ஒவ்வொரு குடும்பமும் மறைக்கல்விப் பணியின் வெற்றிப்படிகளாக மாறும்.

பெற்றோர் பொறுப்பில்லாமல் நடந்து கொண்டால் அவர்களுடைய குழந்தைகள் மட்டுமே பாதிக்கப்படுவர். ஆனால், ஓர் ஊடகத் துறை பொறுப்பில்லாமல் நடந்து கொண்டால் ஒட்டுமொத்த சமூகமே பெரும் பாதிப்புக்குள்ளாகும். ஒவ்வோர் ஊடகத் துறையும் நற்செய்தி விழுமியங்களை தலைமேல் கொண்டு செயற்படுமானால் ஊடகத்துறை நன்மையின் இருப்பிடமாகவும், பிறப்பிடமாகவும் துலங்கும்; மறைக் கல்வியும் உயிர் உள்ளதாக விளங்கும்.

ஆண்டவரின் அருள்வாக்கு எனும் நூலில் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் கூறுகிறார்: 'விவிலியம்' கடவுளின் வார்த்தையைக் கொண்டது. அவ்வார்த்தை இன்றும் உயிர் உள்ளது என்பதை மறைக்கல்வி வழியாகத்தான் எடுத்தியம்ப வேண்டும்; அப்போதுதான் இயேசுவின் விருப்பம் இவ்வுலகில் நிறைவேறும். இவ்வாறு இறைவார்த்தையால் மறைக்கல்வி உயிர் உள்ளதானால், இவ்வுலகம் உயிருள்ளதாக இருக்க வேண்டுமானால் ஊடகங்களோடு இணைந்த மறைக்கல்வி வேண்டும்.

ஊடக வசதி சாதாரண மக்களுக்கு இல்லை, அதனால் ஊடக வழி நற்செய்தியைப் பெறுவது கடினம் என்பர் சிலர். இதற்குப் பணம், பொருள், வசதி வாய்ப்புகள் தேவை என்பர். ஆனாலும், ஒவ்வொரு பங்குக் குருவும், பங்குச் சமூகமும், நடுநிலையங்களும், மறையாசிரியரும், பெற்றோரும் ஊடகங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து அர்ப்பணித்துச் செயற்பட்டால் மறைக்கல்வியை ஊடகங்கள் வழியே மிகச் சிறப்பாக வழங்க முடிவதோடு இயேசுவின் விண்ணேற்ற ஆசையை முழுமையாக நிறைவேற்றவும் முடியும் என்பது திண்ணமாகும். ■

11ம் பக்க தொடர்

உண்மையைத் தேடுபவர்களாக உள்ளோம். முன்னரெப்போதினும் பார்க்க இன்று இந்த ஆழ்விருப்பினை நாம் பகிர்ந்து கொள்கின்றோம். மக்கள் தகவல்களினைப் பரிமாறிக் கொள்ளும்போது உலகைப் பற்றிய தமது நோக்கு, தமது நம்பிக்கைகள், தமது முடிவான குறிக்கோள்கள் போன்றவற்றினை ஏலவே தம்மிடையே பாரிமாறிக் கொள்கின்றனர். *(2011ம் ஆண்டின் உலக தொடர்பாடல் தினசெய்தி)*

தொடரும் ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையத்தினால் நடாத்தப்பட்ட

# உலகத் தொடர்பு தின விழா



உலகளாவிய கத்தோலிக்க திருச்சபையால் ஆண்டுதோறும் கொண்டாடப்படும் உலகத் தொடர்பாடல் தினத்தை (World Communication Day) முன்னிட்டு மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையத்தினால் 'தொடர்பாடல் தின விழா' கடந்த ஞாயிற்றுக்கிழமை (08.06.2012) அன்று மாலை 6.30 மணிக்கு சமூகத் தொடர்பு அருட்பணி மையத்தின் திறந்தவெளி அரங்கில் இடம்பெற்றது. மையத்தின் இயக்குனர் அருட்திரு. தமிழ்நேசன் அடிகளார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்விற்கு மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். மன்னார் புனித செபஸ்தியார் பேராலயப் பங்குத்தந்தை அருட்திரு. பி. யேசுராஜா அடிகளார், மன். புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலை அதிபர் அருட்சகோதரி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், கலாபூசணம் திரு பறுநாந்து பீரிஸ், சமாதான நீதவான் திரு. சிந்தாத்துரை ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் இவ்விழாவில் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வின் வரவேற்புரையை சமூகத்தொடர்பு அருட்பணி மையத்தின் மத்திய குழு உறுப்பினர் திரு. அந்தோனிதாசன் பெனாண்டோ (ராதா) அவர்கள் நிகழ்த்தினார். இவ்விழாவில் மன். சித்திவிநாயகர் இந்துக் கல்லூரியின் (தேசிய பாடசாலை) மாணவர்களால் 'தெருத்திண்ணை' என்ற சமூக நாடகமும், மன். பற்றிமா மத்திய மகாவித்தியாலயத்தினால் 'பாருள்ளே ஒரு வலிமை' என்ற கூத்துருவ நாடகமும் மேடையேற்றப்பட்டன.



இவ்விழாவின் சிறப்பு நிகழ்வாக தமிழ் நேசன் அடிகளாரைக் காப்பாளராகக்கொண்டு இயங்கும் "தழல்" இலக்கிய வட்டத்தினரால் "தொடர்பாடலின் வளர்ச்சி சமூகத்திற்குச் சாதகமே - பாதகமே" என்ற தலைப்பில் பட்டி மன்றம் இடம்பெற்றது. இப்பட்டிமன்றத்திற்கு நடுவராக எழுத்தாளர் துறையூரான் (ஆசிரியர் திரு. சிவானந்தன்) அவர்கள் இருந்தார். பலவித நடன நிகழ்வுகள் இவ்விழாவை அலங்கரித்தன. மேலும், இவ்விழாவின் போது இளங்கலைஞர்கள் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

மன்னார் பள்ளிமுனையைச் சேர்ந்த பாடகி செல்வி அனோஜா அவர்களுக்கு 'கவிக்குயில்' என்ற விருதும், மன்னாரைச் சேர்ந்த எழுத்தாளரும், குறும்பட இயக்குனருமான திரு. நிசாந்தன் அர்களுக்கு 'பல்துறை வித்தகன்' என்ற விருதும் வழங்கப்பட்டது.

மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையத்தின் சார்பில் மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் இக்கலைஞர்களுக்கு பொன்னாடை போர்த்தி விருதுகளை வழங்கி வைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கித்தேரியம்மாள் அம்மானை:

(ஜூலை மாதத் தொடர்)



தந்தைக்கு உபதேசம் செய்த முருகப் பெருமானைப்பற்றி இந்து சமயத்தில் கூறப்படுகின்றது. இங்கு கித்தேரி தன் தந்தைக்கு சத்திய வேதத்தைப் போதிக்கின்றாள்.

"ஆதியிலான் அந்தமிலான் ஆக்கையிலான்"

*(சிறைப்படுத்த காதை: 4)*

எனத் தொடங்கி

"பொருள் அனைத்தும் நிற்பான் பொருள்அழியத்
தானழியான்
இருள் அனைத்தும் நிற்பான் இருள் ஒழியத் தான்
அழியான்
வினையுமலா தெல்லாவினைமுடிக்கும்
காரணனாய்
நினைவுமலாத் தான்மறவா நீதித் தனிக் கோலான்"

*(சிறைப்படுத்த காதை: 31 – 32)*

எனவும்

"ஓர் மொழியால் மூவுலகும் உண்டாக்கினவன்"

*(சிறைப்படுத்த காதை: 34)*

எனவும் கடவுளின் மகிமையைக் கூறுவதோடு,

"நீசன் எனத் தாங்கா நெடும் பகையால்
பட்டவனை
ஈசன் என நான் தொழுதல் ஈனமன்றோ?'

*(சிறைப்படுத்த காதை: 64)*

என கிறிஸ்துவைப் பழித்துரைத்த மன்னனுக்கு

"ஐயாயிரர் பசியை ஆற்ற உலகேந்திய தன்
கையால் ஐந்தப்பம் கஎிந்தேந்தி
ஈந்தனன்தான்
கண்மிசையே மண்தடவிக் கண்குருடு
தீர்த்தனன்தான்
மண்மிசையே போவதுபோல்மாகடல்மேல்
போயினன்தான்
தான்அருளி ஊர்மரமேல் தன்னுயிரைத்
தந்தனனக்கால்
வான்இருள நண்பகலும் மாலைஎன
ஆக்கினன்தான்"

*(சிறைப்படுத்த காதை: 68, 69, 72)*

எனவும்,

"தயைவயத்தால் மாய்ந்ததன்பின் தானாய்
எழுந்தனன்தான்
இயைவயத்தால் தானாக ஏந்தியவான்
ஏறினன்தான்"

*(சிறைப்படுத்த காதை: 74)*

எனவும் கிறிஸ்துவின் அரும்பெரும் செயல்களைத் தன் தந்தைக்கு எடுத்துக் கூறுகின்றாள். ஆனால், கொடிய மனத்தினனான காயன் என்னும் அம்மன்னன் அவளது போதனைகளுக்குச் செவி சாய்க்கவில்லை.

வீரமாமுனிவர் அன்னை மரியாள் மீது அதீத பக்தியுடையவர். மரியாள் புகழைக் கித்தேரி வாயிலாக அவர் பாடியுள்ளார்.

தந்தையால் மீளவும் சிறைப்பிடிக்கப்பட்ட கித்தேரி, மரியாளை நோக்கிப் புலம்புவதாக இது அமைந்துள்ளது.

"வானோர்க்கு அமுதியலே
மண்ணோர்க்கு உயிர்நிலையே
ஈனோர்க்குறுதுணையே
என்னரசே மாமரியே
கல்லார்க்கு நூற்கடல்நீ
காவலில்லார்க்கோர் அரண்நீ
இல்லார்க்கு மேல்திருநீ எல்லார்க்கும்
எல்லாம் நீ'

(மலைஅடை காதை: 12,13,14,15)

o றூபி வலன்ரீனா பிரான்சிஸ்
முதுநிலை விரிவுரையாளர்.
மொழித்துறை - கிழக்குப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணத்துறவு வாழ்வை வாழ்வதில் அருட்பணியாளர்கள் ....

"ஆசியத் திருச்சபையில் இன்று நிலவும் நெருக்கீடுகள் மத்தியில் மணத்துறவு வாழ்வை வாழ்வதில் அருட்பணியாளர்கள் முகங்கொடுக்கும் சவால்கள்" என்னும் தலைப்பில் கடந்த மே மாதம் 14 முதல் 19 வரை பாங்ஹொக் நகரத்தில் உள்ள ஆரோபண பல்கலைக்கழகத்தில் கருத்தமர்வு ஒன்று நடைபெற்றது. இதில் 7 ஆசிய நாடுகளிலிருந்து ஒரு கருதினால், இரண்டு பேராயர்கள், ஐந்து ஆயர்கள், 83 குருக்களும், குருமட உருவாக்கு னர்களும் பங்கு கொண்டனர். இக்கருத்தமர்வு மூன்று நோக்கங்களைக் கொண்டிருந்தது.

1. இன்றைய உலகின் அதிநவீன கலாசாரமும் ஒழுக்கத்தளர்வும் எவ்வாறு குருத்துவ மணத் துறவைப் பாதிக்கின்றன என்பது குறித்து ஆயர்கள், உருவாக்குனர்கள் மற்றும் குருக்கள் சிந்திக்கத் துணைபுரிதல்.

2. தமது உருவாக்கத்தின் போது எதிர்காலத் தில் ஓர் ஆரோக்கியமான, மணத்துறவு டைய குருத்துவத்தை நோக்கி உளவியல் ரீதியாகவும் பாலியல் ரீதியாகவும் வளர்ச்சி யடைய குருத்துவ மாணவர்களை வழி நடத்தும் பொறுப்பை இன்னும் ஆழமாக உணர்ந்து கொள்ள ஆயர்கள், உருவாக்கு னர்களுக்குத் துணைபுரிதல்.

3. குருத்துவ மணத்துறவுக்கு இன்றைய உலகில் ஏற்படும் சவால்களுக்கு முகம் கொடுக்கவும் குருத்துவத்தின் மகத்துவத்தை நிலைநாட்டவும் குருக்களுக்குத் துணை புரிதல் என்பனவாகும். •

இவ்வம்மானையில் தமிழ்க்காவிய மரபினையும் வீரமாமுனிவர் பின்பற்றியுள்ளார். நாட்டு, நகர வர்ணனைகளில் இதனைச் சிறப்பாகக் காணலாம். பிறப்புக் காதையில் நாட்டு வருணனை 29 கண்ணிக ளிலும், நகரவருணனை 14 கண்ணிகளிலும் அமைந்துள்ளன.

இலுசித்தானிய நாட்டின்சிறப்பு 29 கண்ணிக ளில் வர்ணிக்கப்பட்டுள்ளது.

**உதாரணம் :**

"பார்விளை சிறப்பின் மிக்கதாய் இப்பார்
படர்நிலத்தொரு முகம் ஆக
சீர்விளை சிறப்பிற் பூமகள் அணிகள்
சேர்த்திய செப்பென ஆக
போர்விளை சிறப்பிற் பூதலத்தாண்மை
புக்குறை நல்லரண் ஆக
ஏர்விளை சிறப்பிற் பொருவிலதாகும்
இலுசித்தானியவெனும் நாடே"

*(கித்: பிறப்புக் காதை: விருத்தம்: 1)*

இலுசித்தானிய நாடு அவனிக்கோர் அழகிய முகமாகவும், பூமகளின் அரிய ஆபரணங்கள் அனைத்தும் அடங்கிய செப்பாகவும், ஆண்மைக் கோர் அரணாகவும் விளங்கியது எனச் சிறப்பிக்கப்பட் டுள்ளமையை இச்செய்யுளில் உணர்த்தியுள்ளார் புலவர்.

"கடைந்த தயிரல்லால் கலங்குவன
அங்கண்ணிலை"
"குடைந்தசுழி நீருமலால் கோணிச் சுழன்றதிலை
காயுமெனக் கண்டதுலை காயமெனக்
கண்டதுள்ளி
மாயுமெனக் கண்டதுநாள் மாறுமெனக்
கண்டதலை"

*(கித்: பிறப்பு: 24, 25)*

என்பதில் நயமான கற்பனையைக் காணலாம்.

அந்த நாட்டிலே தயிரைத் தவிரக் கலங்குவது எதுவுமில்லை: நீரின் சுழலைத் தவிர அங்கு துன்பத்தில் சுழல்பவர் யாருமில்லை: நெல்தான் வயலில் தாழ்ந்து நிற்குமே ஒழிய அங்கு தாழ்ந்தவர் யாருமில்லை: சந்தனமன்றி வேறெதுவம் தேய்வ தில்லை என இச் செய்யுளில் இலுசித்தானிய நாட்டின் சிறப்பினை வர்ணித்துள்ளார்.

அடுத்து இந்நாட்டிலுள்ள பிராகமாநகரின் சிறப்பினைப் புலவர் கூறுகின்றார்.

**உதாரணம் :**

'கண்டார் உளம்வியப்பார் காணார் உளத்துணரார்
உண்டான செல்வநகர்க்கு ஒப்பிலையால்
அம்மானை' *(பிறப்பு: 43)*

இரண்டாம் காதையான பாலமாட்சிக் காதை யில் அம்மானை உறுப்புகளாகிய காப்பு, செங்கீரை, தாலாட்டு, சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, நீராடல், அம்மானை, ஊசல் என்ற பத்து விடயங்க ளையும் ஒருசேர அமைத்துப் பதினொரு கண்ணி களில் பாடியுள்ள திறன் போற்றுதற்குரியது.

தொடரும்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆபிரகாம் லிங்கனின் இன்னுமொரு முகம்



ஆபிரகாம் லிங்கன் அவர்களைப் பற்றி நாம் அறிந்தவை மிகவும் சொற்பந்தான். தெரு விளக்கிலிருந்து படித்தார்; புத்தகத்தை இரவல் வாங்கிப் படித்து, அது மழையில் நனைந்து, நட்டத்தை ஈடுசெய்ய மூன்று நாட்கள் வயலில் வேலை செய்தார்; அவர் சுட்டுக் கொல்லப்பட்டாரென்று சிலவற்றை அறிந்து வைத்துள்ளோம்; இன்னுமொன்று, கறுப்பின மக்களுக்கு விடுதலை வாங்கிக் கொடுத்தார் என்பது உச்சமான செய்தி.

கறுப்பின மக்களின் விடுதலைக்காக அவர் பட்ட பாடுகள் கொஞ்சநஞ்சமல்ல. "அவருக்கு அடிமைகள் மேல் என்ன அக்கறை? எல்லாம் சுய ஆதாயம் பெறத்தான். அப்போதுதானே வாக்குகள் கிடைக்கும்! புகழ் கிடைக்கும்!" என்று விமர்சனம் சொன்னவர்களும் ஏராளம்.

அமெரிக்க உள்நாட்டுப்போர் நடந்துகொண்டிருந்தது; சில மாநிலங்கள் பிரிந்து சென்று விட்டன. அப்போது "New York Tribune" என்ற பத்திரிகையில் Horace Greeley என்பவர் "இருபது மில்லியன் மக்களின் வேண்டுகோள்" என்ற தலைப்பில் "அடிமைத்தனத்திற்கு எதிராக அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று எழுதியிருந்தார்.

அதற்கு லிங்கன் உடனடியாகப் பதில் எழுதியிருந்தார். "இப்போரில் என்னுடைய தலையாய குறிக்கோள் நாட்டின் ஒற்றுமையைக் காப்பாற்றுவதுதான். அடிமை முறையைப் பாதுகாப்பதோ ஒழிப்பதோ என்னுடைய நோக்கமல்ல. ஓர் அடிமையைக்கூட விடுதலை செய்யாமல் என்னுடைய தேசத்தைக் காப்பாற்ற முடியுமானால் அதை நான் செய்வேன். எல்லா அடிமைகளையும் விடுதலை செய்தால்தான் இந்தத் தேசத்தைக் காப்பாற்ற முடியும் என்றால் அதையும் நான் செய்வேன். அல்லாது சிலரை மட்டும் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கமுடியும் சிலரை விடுவிக்க முடியாது, அப்போதுதான் தேசத்தை காப்பாற்ற முடியுமென்று சொன்னால்கூட அதையும் நான் செய்வேன்".

இவ்வறிக்கை விமர்சனத்திற்குள்ளானது. உண்மையில் அவர் அடிமை விடுதலையை விரும்பிய மனிதர்தான் என்றாலும், தேச ஒற்றுமையை அவர் முன்னிறுத்தியிருந்தார்.

"அடிமைகளை விடுதலை செய்து அவர்களையும் போரில் ஈடுபடச் செய்ய வேண்டும்; இல்லையென்றால், அமெரிக்க யூனியன் சரணடைய வேண்டும். இந்த இரண்டில் ஒன்றைச் செய்வதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை" என்றும் லிங்கன் சொல்லியிருந்தார்.

1862, செப்டம்பர் 22ம் திகதி அறிவிப்பொன்றை வெளியிட்டார். "சரியாக இன்னும் மூன்று மாதங்கள் அவகாசம் தருகிறேன்; பிரிந்துபோன மாநிலங்கள் மரியாதையாக ஐக்கிய அமெரிக்க கூட்டமைப்புக்குள் வந்து சேர வேண்டும் இல்லையென்றால், அந்த மாநிலங்களிலுள்ள அத்தனை அடிமைகளும் விடுதலையடைந்தவர்களாக அறிவிக்கப்பட்டுவிடுவார்கள்".

இதுதான் இராஜ தந்திரம். எதிரிகளின் மாநிலங்களாக இருந்தாலும் அடிமைகள் நிறையவிருந்த பகுதி தென்பகுதி. அவர்களுக்குச் சுதந்திரம் கொடுக்கக் கூடாது என்பதை முன்வைத்துத்தான் போரே நடந்து கொண்டிருந்தது. அம் மாநிலங்கள் அமெரிக்காவிலிருந்து பிரிந்து போனதும் அதற்காகத்தான்.

இவ்வறிவிப்பு கறுப்பின மக்களின் ஆதரவை லிங்கன்பால் கூட்டியது.

1863 ஜனவரி 1ம் திகதி பிரகடனத்தை வெளியிட்டார். பின்னர் தன் நண்பன் "சீவர்ட்டிடம்" இப்படிச் சொன்னார்:

"அடிமைத்தனம் குற்றமில்லை என்றால் உலகில் எதுவுமே குற்றமில்லை. நான் நல்ல செயலைச் செய்கின்றேன் என்று இன்று உறுதியாக நினைப்பதைப் போல என் வாழ்நாளில் வேறு எப்போதும் நினைத்ததில்லை".

இவ்விடத்தில் இரண்டு விடயங்களை வாசகரிடம் பகிர விரும்புகிறேன்:

1. லிங்கன் வாசித்து நனைந்த புத்தகம் எதுவென்று தெரியுமா....?
   ஜோர்ஜ் வாஷிங்டன் பற்றிய புத்தகம்
2. இரண்டு நூற்றாண்டுகட்கு முன்பே லிங்கனிடம் இருந்த மனப்பாங்கு, இன்றைய ஆசிய நாட்டுத் தலைவர்களிடம் ஏன் இல்லை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடுகுக் கதை 43

# "கக்காப் பழக்கம்"



■ பெற்றி

அன்ரன் அதிகாலையில் எழுந்து நடைப்பயிற்சி செய்வது வழக்கம். சில வேளைகளில் அவரின் கடைசி மகனும் அவருடன் நடப்பதுண்டு. அவன் நான்காம் வகுப்புப் படிக்கின்றான். காலையில் நடக்கும் போது நாள் முழுதும் உற்சாகமாக இருக்கும் "காலையில் பறவைகள் பாடுவது, விவசாயிகள் தோளில் கலப்பை யுடன் களனிக்குச் செல்வது" என்றெல்லாம் சிறுவயதில் படித்ததெல்லாம் அன்ரனுக்கு ஞாபகம் வரும்.

இப்போதெல்லாம் மாறிவிட்டது. உடைந்த தார் வீதிகள், கொன்கிரிட் வீதிகள், கார்ப்பெட் வீதிகளில்தான் அன்ரன் நடக்கின்றான். காலையில் நடைப்பயிற்சிக் குச் செல்லும்போது காலை ஐந்து மணிக் கெல்லாம் நகர்ப்புற மக்கள் விழித்தெழு வதைக் காணமுடிவதில்லை. ஏன் ஆறு மணிக்குக்கூட எழும்புவதில்லை. ஒன்று இரண்டு பாண் ஓட்டோக்கள், மீன் பெட்டி கட்டிய மோட்டார் சைக்கிள்கள் மட்டுந்தான். ஆனால், "பணக்காரத்தனம்" தெரியும் ஒன்று இரண்டு வீடுகளில் மட்டும் "லைட்" எரியும். அவர்கள் மெதுவாக "கேற்றைத்" திறந்து தங்கள் வளர்ப்பு நாய்களை வீதிக் குக் கொண்டுவந்து, "டார்லிங் கக்கா போங்கடா..." என்று வீதியை அசுத்தப்படுத்துவார்கள்.

வீதியில் கிடக்கும் சாணியை மிதிக்கா மல் நடப்பதே கடினம்... இதில் நாய் அசுத்தம் வேறு. இதனைக் கண்ட அன்ரனின் மகனுக்குக் கடுங்கோபம்.

"என்னப்பா இது? நாய றோட்டுல கக்கா போக விடுறாங்க........ இதுதான் "ஒரிஜினல் கக்காப்பழக்கம்" என்று சொன்னான்.

அன்ரன் எதுவும் பேசவில்லை. ●

## குழந்தைத் தொழிலாளர்கள்



உலகில் அதிகமான சிறுவர் தொழிலாளரைக் கொண்டுள்ள இந்தியாவில் ஐந்து மற்றும் பதினான்கு வயதுக்குட்பட்ட 1.26 கோடி சிறுவர்கள் உள்ளனர் என்றும், இவர்களில் 20 வீதத்தினர் வீட்டுவேலை செய்கின்றனர் என்றும், அதிகம் துன்புறுத்தப்படு கின்றனர் என்றும் உலகத் தொழில் நிறுவனம் கூறுகின்றது.

மதமாற்றத்திற்கான ஒரு முகமூடியாக இந்தியத் தல திருஅவையின் பிறரன்புப் பணிகள் சந்தேகத்துடன் நோக்கப்படுவதால், அப்பிறரன்புப் பணிகளுக்கு இருக்கும் ஆபத்துகள் குறித்து தன் கவலையை வெளியிட்டுள்ளார் வத்திக்கான் அதிகாரி கர்தினால் இராபர்ட் சாரா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகம்

# மனித உயிர்களை மதி! அவற்றைக் கொலை செய்யாதே!!

## மறைக்கல்வி ஆண்டு 05



## நலமா...? சுகமா...?

எங்கோ காற்றுவாக்கில் கலந்து வந்து என் செவிகளில் ஊடறுத்த உண்மைச் சம்பவம் ஒன்று.

மீன்பாடும் தேன்நாடாம் மட்டக்களப்பில் கல்லடிப் பாலத்துக்கு அண்மையில் குழந்தையொன்று வீசப்பட்ட நிலையில் இருந்தது. அக்குழந்தையின் தாய் யாரென்று தெரியாத நிலையில் இரவெல்லாம் நாயொன்று காவல் காத்து அக்குழந்தையின் அருகினில் யாரையும் நெருங்க விடவில்லையாம்.

**மற்றுமோர் உண்மைச் சம்பவம்:** யாழ்ப்பாணம் பாஷையூரில் மைதானம் ஒன்றில் தொப்புள் கொடி அறுக்கப்படாத நிலையில் ஒரு குழந்தை போடப்பட்டிருந்தது. இவை மட்டுமல்ல, வவுனியா வைத்தியசாலையில் பிறந்த குழந்தையினை குழந்தையின் தாய் வீடு நோக்கிச் செல்கையில் ஆள்நடமாட்டம் இல்லாத பகுதியில் குழி தோண்டிப் புதைத்ததாகவும் ஆனால், அன்றைய தினமே அக் குழந்தை குழியிலிருந்து உயிருடன் மீட்கப்பட்ட தாகவும் தெரியவந்தது.

இவை இன்று சர்வசாதாரணமாகி விட்ட சம்பவங்கள் என்றே கூறலாம். "மனித உயிர்களை மதி... அவற்றைக் கொலை செய்யாதே" என்பது மறக்கப்பட்டு உயிர்க்கொலைக்கு விலை பேசப் படுகின்றது. உயிரொன்று தாயின் கருவில் உருவாகும் போதே அதற்கு உடல், உயிர், ஆன்மா போன்ற மூன்றுமே இறைவனால் கொடுக்கப்படுகின்றது. இந்தக் கொடையை மனிதன் அழிக்க நினைக்கின்ற போது அவன் இறைவனுக்கு எதிராகக் குற்றஞ் செய்கின்றான்.

இவை மட்டுமல்ல, ஒருவன் தன் உடலைப் பாதுகாக்காமல், தன் உடலுக்கு ஓய்வு கொடுக்காமல், பாரிய வேலை செய்வதும், மது அருந்துவதும், புகைபிடிப்பதும் தீய பாதைக்குள் தன் உடலைக் கொண்டு செல்வதும் உடலுக்கு எதிராகச் செய்கின்ற பாவங்களே!

இது மட்டுமல்ல, ஒருவரது உள்ளம் உடையும் வண்ணம் வார்த்தைகளைப் பிரயோகிப்பதும் ஓர் உயிரினை உடையச் செய்கின்ற கொலையே ஆகும்.

***ஏன் கொலை செய்யக்கூடாது ?***

1. "ஆண்டவராகிய கடவுள் நிலத்தின் மண்ணால் மனிதனை உருவாக்கி, அவன் நாசியில் உயிர் மூச்சை ஊத மனிதன் உயிருள்ளவன் ஆனான்" (தொ.நூ 2:7) எனவே, மனித உயிர் இறைவனிடமிருந்து பெற்றுக்கொண்ட அளப்பரிய கொடையாகும். அவ்வுயிர் மட்டில் மிகுந்த அக்கறையுடையவர்களாக இருக்க வேண்டும்; மாறாக, உயிரையோ உடலையோ அழிப்பதற்கு எமக்குச் சிறிதளவேனும் அதிகாரம் இல்லை. காரணம், அவ்வுயிர் இறைவன் தந்த பரிசாகும்.

2. ஒவ்வொரு மனிதரும் தனித்தன்மை உடையவர். அவரைப்போல் எவரும் இருந்ததும் இல்லை இருக்கப்போவது மில்லை. படைப்புகள் அனைத்தையும் மனிதரு டைய நலனுக்காகப் படைத்த இறைவன் மனிதர்களை அவர்களுடைய சொந்த நலனுக் காகவே படைத்துள்ளார். மனிதன் கடவுளு டைய படைப்பின் சிகரம். எனவே, மனித உயிரைக் கொலை செய்வது பாவம் மட்டுமல்ல, இறை நிந்தனையும் கூட.

3. இவ்வுலக நலன்களிலெல்லாம் தலைசிறந்தது வாழ்வு எனும் கொடை. ஒவ்வொருவருக்கும் உயிருடன் வாழ உரிமை உண்டு. இந்த அடிப்படை உரிமையைச் சட்டத்திற்கு முரணா கப் பறிக்கும் உரிமை எவருக்கும் கிடையாது.

திருமறைக்கல்வி நிலையம் - திருகோணமலை

4. மனித சமூகம் வாழ வேண்டுமென்றால் ஒவ்வொரு தனி நபரும் வாழ வேண்டும். எவரும் மற்றவரைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம் சொந்த அதிகாரத்தால் கொல்ல முடியும் என்றால் சமூகமே அழிந்து விடும். எவ்விதமாக நோக்கினாலும் மனித உயிர் என்பது பொக்கிஷமே. அதனை மாசு படாமல் பாதுகாப்பதன் மூலம் இறைவன் தந்துள்ள 5ம் கட்டளையைக் கடைப்பிடிப்பவர்களாவோம்.

***சற்றுத் திரும்பிப்பாருங்கள், கொலை என்றால் என்ன என்பதை ........***

1. ஒருவரைக் கொலை செய்வது
2. கருக்கலைப்பு
3. ஒருவரைப் புண்படும் விதமாகப் பேசுவது
4. ஒருவரை அவமானப்படுத்துவது
5. பலர் முன்னிலையில் ஒருவரைப் பரிகாசம் செய்வது
6. ஒருவரின் நற்பெயரைக் கெடுப்பது
7. தற்கொலை செய்யத் தூண்டுவது
8. தற்கொலை செய்தல்
9. வைத்தியர்களின் கவனக் குறைவால் நிகழ்கின்ற இறப்பு
10. இயற்கை முறை தவிர்ந்த ஏனைய குடும்பக் கட்டுப்பாட்டுச் செயல்கள்

இவை எல்லாமே கொலை என்பதை எண்ணிப் பார்க்க மனம் வேதனைப்படுகின்றது. காரணம், நானும் இந்தப் பத்துக் கொலைகளுக்குள்ளும் ஒன்றையேனும் செய்கின்றேனே!

## சிறுகதை - கட்டுரைப் போட்டி முடிவுகள்

46வது உலகத் தொடர்பு தினத்தை முன்னிட்டு மறைக்கல்வி ஆண்டின் பின்னணியில் சிறுகதை - கட்டுரைப் போட்டிகளை அறிவித்திருந்தோம். அவற்றில் மிகக் குறைந்தளவு போட்டியாளர்களே பங்கு கொண்டனர் என்பது வருத்தத்திற்குரியது.

அவ்வாறு பங்கு கொண்டோரில் சிறுகதைப் போட்டியில் "**சிறையில் மறைக்கல்வி**" என்னும் சிறுகதையை எழுதிய மொறட்டுவயைச் சேர்ந்த **அருள் சகோதரி மெரி ஜெனா OSB அவர்கள் முதற் பரிசாக ரூபா 5000ம் பெறுகிறார்.**

"**மறைக்கல்வியும் ஊடகங்களும்**" என்னும் தலைப்பில் இடம்பெற்ற கட்டுரைப் போட்டியில் முதற் பரிசாக **ரூபா 5000 பெறுபவர் மட்டக்களப்பு கல்லடி டச்பாரைச் சேர்ந்த செ.லூசியா அவர்கள்.** ஏனைய படைப்புகள் பரிசுக்குத் தகுதியற்றவையென நடுவர்கள் கருதியதால் 2ம், 3ம் மற்றும் ஆறுதல் பரிசுகள் எதுவும் வழங்கப்படவில்லை.

பரிசு பெற்றவர்களை வாழ்த்துகிறோம்! பங்கு கொண்ட அனைவருக்கும் நன்றி கூறுகிறோம்.

(ஆ-ர்)

# நல்லதைக் காண்போமே!

பேதங்கள் மனங்களிலே
வேரோடும் போது
வேதங்கள் கூறியவை
வெறும் வார்த்தைகள்

உறவுகளை அழித்துவிடும்
உணர்வுகளை இனங்கண்டு
அழித்து அதன் வேர்களையும்
அடியோடு எடுப்போமே

மண்ணையும் இனத்தையும்
மொழியையும் மதத்தையும்
மதிப்பதில் தவறொன்றுமில்லையே!

இவைகளை வெறியெனவே
ஊட்டியே அவைகளால்
உறவுகள்
உடைந்தழியும்போது
பயனேதுமுண்டா சொல்வீரே!

மண்ணெனக் கூறிடும் பிளவுகள்
மதமெனக் கூறிடும் சரிவுகள்
மொழியெனக் கூறிடும் இடைவெளி
உறவுகள் வளரத் தடையானால்
இவைகள்
ஒன்றுமே வேண்டாம் போகட்டுமே.

நாயும் பூனையும் உறவினிலே
ஒன்றாகி வாழ முடியுமென்றால்
ஆறு அறிவுடன் வாழும் நாம்
அன்பினை மறப்பது எப்படியோ.

பூமியில் எங்குமே வாழ்வதற்கு
பிறப்பால் எமக்கு உரிமையுண்டு
அறிந்த மொழியைப் பேசுதற்கு
அனுமதி ஏதும் தேவை இல்லை

சிந்தனை தந்த உணர்வுகளால்
விரும்பியே மதங்களில் வாழ்கின்றோம்
பின்னரும் ஏன்தான் இடைவெளிகள்
பிளவுகள் நமக்குள் ஏன்தானோ....?

இறைவன் தருகின்ற நல்லுணர்வென்றும்
தீமையைத் தூண்டுவதில்லையே
தீமையைத் தூண்டா உணர்வுகளை
தேடியே துணையாய்க் கொண்டிடவே
நாளுமே நமக்கு "ஒளி" எனவே
நல்லவை காண்போம் வாழ்வினிலே!

அருட்பணி N.C. அருள்வரதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத்திகதி
**30- 08 - 2012**




# விவிலியங் கற்போம் –112

## இணைச்சட்டம் : 10ம் 11ம் அதிகாரங்கள்

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

மோசே இஸ்ரயேலரிடம், "என் மன்றாட்டைக் கேட்ட ஆண்டவர் முன்னர் போன்றே இரு கற்பலகைகளை வெட்டியெடுத்து மலையேறி என்னிடம் வா. மரத்தால் ஆன பேழையையும் உனக்காகச் செய்துகொள். நான் எழுதித் தரப்போகும் கற்பலகைகளைப் பேழையில் வை என்றார். அப்படியே, .......................... மரத்தில் பேழையைச் செய்தேன். இரு கற்பலகைகளையும் கரங்களில் எடுத்துக் கொண்டு சென்றேன். கடவுள் மீண்டும் எழுதித் தந்த அப் பலகைகளைக் கொண்டு வந்து பேழையில் வைத்தேன். அதன்பின் இஸ்ரயேல் மக்கள் பெனயாக்கானுக்கு அருகிலுள்ள ...................... மோசேராவுக்குப் பயணஞ் செய்தனர். ஆரோன் அங்கு இறந்து அடக்கம் செய்யப்பட்டார். அவர் மகன் எலயாசர் அவருக்குப் பதிலாகக் குரு ஆனார். அங்கிருந்து குத்கோதாவுக்கும் தொடர்ந்து யோற்றுபாத்தாவுக்கும் பயணஞ் செய்தார்கள். உடன்படிக்கைப் பேழையைச் சுமக்கவும், ஆண்டவர் ...................... பணிபுரியவும், அவர் பெயரால் ஆசி வழங்கவும் ஆண்டவர் லேவியின் குலத்தைத் தனித்து வைத்தார். ஆண்டவரே அவர்களது உரிமைச் சொத்து. அவர்களுக்கு எந்த உரிமைச் சொத்துமில்லை. தம் சகோதரருடன் பங்குமில்லை. கடவுள் தம் கட்டளைகளையும் ...................... நீங்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்பதைத் தவிர, அவர் வேறென்ன உங்களிடமிருந்து எதிர் பார்க்கிறார்? நீங்கள் வணங்காக் கழுத்தினராய் இராதீர்கள். ஆண்டவர் மீது அன்பு கூருங்கள். ஆண்டவர் செய்த மாபெரும் செயல்கள் அனைத்தையும் காண்பீர்கள். ...................... ஆணையிட்டுச் சொன்ன மண்ணில் நெடிது வாழ்வீர்கள். அது பாலும் தேனும் நிறைந்து வழியும் நாடு. நீங்கள் உங்கள் கடவுளை அன்பு கூர்ந்து, முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும் ஊழியம் செய்தால், அவர் அனைத்து வளங்களையும் தருவார். நீங்கள்...................... வணங்கி ஊழியம் பண்ண வஞ்சிக்கப்படாதவாறு கவனமாயிருங்கள். இல்லையேல், கடவுளின் சினம் உங்கள் மேல் வரும். எனவே, என் வார்த்தைகளைக் கைகளில் அடையாளமாகக் கட்டிக் கொள்ளுங்கள். என் வார்த்தைகளை உங்கள் நெஞ்சிலும், நினைவிலும் நிறுத்துங்கள். உங்கள் கண்களுக்கிடையே அவை ...................... பட்டயமாக இருக்கட்டும். பிள்ளைகளுக்கும் கற்றுக் கொடுங்கள். அதனால், நீங்களும் உங்கள் மக்களும் நெடுநாள் வாழ்வீர்கள். இவ்விதம் ஆண்டவரின் கட்டளைகளைக் கடைப்பிடித்தால் ......................, கட்டளைகளை மீறினால் சாபமும் கிடைக்கும். நீங்கள் செல்கையில் கெரிசிம் மலையிலிருந்து ஆசியையும், ஏபால் மலையிலிருந்து சாபங்களையும் அறிவிப்பீர்கள். யோர்தானுக்கு அப்பால், சாலைக்கு மேற்கே கதிரவன் மறையும் திசையில், ...................... வாழும் கானானியரின் நாட்டில், கில்காலுக்கு எதிர்ப்புறமாக மோரே தோப்பு அருகே அல்லவா அவ்விடம் உள்ளது? உங்கள் கடவுள் உங்களுக்குக் கொடுக்கப்போகும் நாட்டையடைய ...................... கடந்து நீங்கள் செல்ல வேண்டும். அதனை உடைமையாக்கி வாழும் போது நான் கூறிய நியமங்களையும், முறைமைகளையும் நிறைவேற்றுவதில் கருத்தாயிருங்கள்" என்று கூறினார்.

**விடைகள்:** **வேற்றுத்தெய்வங்களை, ஆண்டவர், அடையாள, ஆசியும், அராபாவில், யோர்தானை, நியமங்களையும், திருமுன், பெயரோத்திலிருந்து, சித்தம்.**

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும். பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுப் போட்டி




## அறிவை வளர்ப்போம்–112

(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)

1) "வெரித்தாஸ்" ஒலிபரப்புச் சேவை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு

*(1969 - 1972 - 1958)*

2) இந்தியச் செய்தி நிறுவனங்களுள் ஒன்று

(APP - UNI - Tas)

3) உலகில் அதிக வானொலி நிலையங்களைக் கொண்டுள்ள நாடு

(சீனா - இந்தியா - ஐக்கிய அமெரிக்கா)

4) உலகின் முதலாவது தமிழ்ப் புத்தகம்

(கிறிஸ்தவ வணக்கம் - தொல்காப்பியம் - திருமந்திரம்)

5) ஆலும் வேலும் பல்லுக்குறுதி

நாலும் இரண்டும் ...............

(பல்லுக்குறுதி, சொல்லுக்குறுதி, நெல்லுக்குறுதி)

(6) "கடவுள்" என்னும் சொல்லில் "கட" என்பது

(தொகை - சீர் - அசை)

பெயர் : ..................................................................

முகவரி : ..................................................................

..................................................................

அனுப்பவேண்டிய முகவரி:
விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்– 112
தொண்டன்
அ. பெ. எண் – 44
மட்டக்களப்பு.

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:

.............................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








## விவிலியம் கற்போம் - 110 விடைகள்

எபூசியர், சினம், மக்களாக, கட்டளைகளை, அன்பு, மக்களினங்கள், செங்குளவிகளை, கையளிப்பார், தெய்வச் சிலைகளை, சாபத்துக்கு

## அறிவை வளர்ப்போம் - 110 விடைகள்

1) தொல்காப்பியம் 2) குண்டலகேசி 3) பற்கள்
4) கனடா 5) அவுஸ்ரேலியா 6) இரட்டைக்கிழவி

**பரிசுகள் - அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குரூஸ் CRS**

**இரு பிரிவுகளுக்கும் சரியான விடைகளை எழுதி 300/= பரிசு பெறுபவர்**

- தருமலிங்கம் டிலோசனன்
  செட்டியார் வீதி, குருக்கள் மடம்
  மட்டக்களப்பு.

**ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதி 200/= பரிசு பெறுவோர்**

- ர.லவகிருஷ்ணன்
  19, முதலாம் ஒழுங்கை
  சங்கானை மேற்கு, சங்கானை
  யாழ்ப்பாணம்.
- E.B. எட்மன்
  இல.11, பாரதி வீதி
  திருகோணமலை.

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 62 முடிவுகள்**

- **முதலாம் பரிசு - 400/=**
  ச.மேரி ஹெலன் பிரீத்திக்கா
  65, திருச்செந்தூர் வீதி,
  கல்லடி,
  மட்டக்களப்பு.
- **இரண்டாம் பரிசு - 300/=**
  R. டினோ ராகல்
  25 பனிச்சையடி,
  சத்துருக்கொண்டான்,
  மட்டக்களப்பு.
- **மூன்றாம் பரிசு - 200/=**
  அ.கி. ஷெரின் சலோமி
  இல. 5, தேவாலய வீதி,
  அக்கரைப்பற்று - 8.

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றில் கலந்து வரும் ....

## இலங்கை வானொலி தேசிய சேவையில்

கத்தோலிக்க நிகழ்ச்சிகள் – தமிழ்

## ஆகஸ்ட் – 2012

### கத்தோலிக்க நற்சிந்தனை – காலை 5.55 மணி

நாள்: 11, 12, 13, 14 – அருட்தந்தை ஜே. எஸ். மொறாயஸ்
15, 16, 17 – போதகர் T.T. பிரான்சிஸ்
25, 26, 27, 28 – அருட்தந்தை சி.வி. அன்னதாஸ்
29, 30, 31 – அருட்தந்தை ஜூட் சர்வானந்தா

### புதிய உலகம் (வளர்ந்தோர் நிகழ்ச்சி) – மாலை 7.00 மணி

நாள்: 05, 19

(இறைவார்த்தை வழிபாடு, வேரைத்தேடி, குறுநாடகம், செய்திகள், கருத்துரை, பாடல்கள், இன்னும்......)

### சிறுவர் உலகம் (சிறுவர் நிகழ்ச்சி) – மாலை 7.00 மணி

நாள்: 07, 21

(கதையும் கருத்தும், விவிலிய நாடகம், பாடல், இன்னும்.....)

நிகழ்ச்சித் தொகுப்பு :

மலர்வேந்தன்

தொடர்பு:

சமூகத் தொடர்பு நிலையம்,
அ.பெ. எண் – 44,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org